சிரவைக் கௌமாரசபை வெளியீடு.

ஓம்.

குருவே துணை.

திருப்பேரூர்
தோத்திரப் பிரபந்தத் திரட்டு.

*

ஆசிரியர் :

சிரவணபுரம் கௌமார மடாலயம்

ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகள் மாணாக்கர்

ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள்.

*

பதிப்பாளர் :

கோயமுத்தூர், சிவராத்திரி

வெங்கிட்டராம செட்டியார் அவர்கள் புதல்வியார்

கௌமாரச்செல்வி நாகம்மையார் அவர்கள்.

*

விக்கிரம-௵ பங்குனி-௴ ௧௩-உ.

உரிமை பெற்றது.] **1941.** [விலை அணா **6.**

ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகள்.
கௌமாரமடாலயம்,
சிரவணபுரம்.

உ
குருவே துணை.

பாயிரம்.

முகவுரை.

" தவளக் கோட்டுப் பவளமால் வரையைப்
புந்தியம் பாற்கட னிறுவுதூஉம்
செந்தமி ழமுதந் திரண்டெழற் பொருட்டே".

I. நூற்பெயர் விளக்கம்:

1. பேரூர் தோத்திரப் பிரபந்தத் திரட்டு என்னும் இந் நூலானது திருப்பேரூரில் கோயில்கொண்டு எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ பட்டிவிநாயகர், பட்டீச்சுரர், முருகக்கடவுள், நடராஜர், நாராயணமூர்த்தி, பச்சைநாயகி, அரசம்பலவாணர், அகிலாண்ட நாயகி ஆகிய தெய்வங்களின்மீது தோத்திரமாகப் பாடப்பெற்ற நூல் என விரியும்.

2. இப்பிரபந்தத்தில் ஸ்ரீ பட்டிவிநாயகர் பதிகம் ஒன்றும், பட்டீச்சுரர் பதிகம் ஒன்றும், முருகக்கடவுள் திருப்புகழ்ப் பதிகம், நூற்பயன் வெண்பா ஒன்றும், நடராஜர் பதிகம், காப்பு வெண்பா ஒன்றும், ஸ்ரீமந் நாராயணமூர்த்தி பதிகம், காப்பு வெண்பா ஒன்றும், ஸ்ரீ பச்சைநாயகி அம்மன் துதி, சந்தக்கவி ஒன்றும், அரசம்பலவாணர் பதிகம், சந்தக்கவி ஒன்றும், ஸ்ரீ அகிலாண்ட நாயகி பதிகம், சந்தக்கவி ஒன்றும், கும்பாபிடேக கால விளக்க வாழ்த்துக்கவி ஒன்றும், பேரூர்ப்புராண சாரசங்கிரகமாகிய ஸ்ரீ பட்டிநாயக மாலை ஒன்றும், வாழி விருத்தங்கள் இரண்டும், அமைந்துள்ளன.

II. தலப்பெயர் விளக்கம்:

சுந்தரர் கோயில் குறிஞ்சி.

"பாரூரு மரவல்கு லுமைநங்கை யவள்பங்கன் பைங்க ணேற்றன், ஊரூரன் றருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட் கொள்வான், ஆரூரன் றம்பிரா ணாரூரன் மீகொங்கி லணிகாஞ்சி வாய்ப், பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே பெற்று மன்றே."

சுந்தரமூர்த்தி சுவாமிகள் - ஊர்த்தோகை.

"ஆரூரத்தா ஐயாற்றமுதே அளப்பூரம்மானே, காரூர் பொழில்கள் புடைசூழ்புறவிற் கருகாவூரானே, பேரூருறை வாய் பட்டிப்பெருமான் பிறவாநெறியானே, பாரூர்பலரும் பரவப்படுவாய் பாசூரம்மானே".

1. சிவதலங்களில் சிறந்தது திருப்பேரூர். இது மேலைச் சிதம்பரம் பிறவா நெறித்தலம் ஆகிய அநேக காரணப் பெயர்களைக்கொண்டது. இத்தலத்தில் பிறவாப்புளி, இற வாப்பனை என்கிற அற்புதக் காட்சி விருட்சங்களும், வட, தென் கயிலாயங்களும், தெய்வீகம் பொருந்திய பிரம தீர்த்தம் முதல் அநேக தீர்த்தங்களும், எலும்பைக் கல்லாக் கும் காஞ்சிமாநதித்துறையும் உள்ளன.

2. இத் திருத்தலம் பரம சிவன், அம்பிகை, முருகக் கடவுள், விஷ்ணு மூர்த்தி, பிரமன் இவர்களின் வடிவங்களா கிய வெள்ளிமலை, சத்திகிரி, மருதமலை, பெருமாண்முடி, அயன்மலை ஆகிய பஞ்ச கிரிகளின் நடுவில் விளங்குகின்றது. இங்கு முழு முதற் கடவுளாகிய சிவபிரான் சுயம்புவாய்

மூலைத்துப் பட்டீச்சுரர் என்னும் திருநாமத்துடன் எழுந்தருளித் தம்மை அன்புடன் வழிபடுவோர்க்கு வேண்டிய எல்லா நல்வரங்களையும் கொடுத்தருளுகின்றார்.

3. இத்தலத்திலே பட்டிமுனி, கோமுனி ஆகிய பிரம, விஷ்ணுக்களும், இந்திரன் முதலாகிய தேவர்களும், காலவர், நாரதர், விசுவாமித்திரர் முதலிய முனிவர்களும், முசுகுந்தன், சேரன், சோழன், பாண்டியன் முதலிய பேரரசர்களும், பிறரும் பூசித்துத் தவப் பயன்பெற்றுய்ந்தனர்.

4. சைவ சமய பரமாசாரியர்களான திருநாவுக்கரசு சுவாமிகளும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தேவாரம் பாடித் துதித்துள்ள வைப்பு ஸ்தலமாயுள்ளது. இத்தலத்தில் பசுவின் சாணத்தில் புழுக்கள் உண்டாவதில்லை என்று தல புராணம் கூறுகின்றது.

5. இத்தலத்தின் பெரிய ஆலயத்திலிருந்து கிழக்கே சுமார் இரண்டு பர்லாங்கு தூரத்தில் கோலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார் என்னும் நான்கு சாத்திரங்களை உலகு உய்யும்பொருட்டு அருளிச்செய்த மஹான் ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் கொண்டுள்ள சமாதி நிலை மடாலயத்தில் தற்போது அதி சிறப்பாகக் குரு பூசை முதலியன நடந்துவருகின்றன.

6. பிறவா நெறித்தலமாகிய இப் பேரூரின் பெருங் கோயிலில் விளங்கா நிற்கும் சுயம்புலிங்க மூர்த்தியின் சிரசில் காமதேனுவினுடைய கன்று விளையாடிக்கொண்டிருக்கையில் கன்றினது முன்னங்கால் அகப்பட்டுக்கொண்டதாகவும்,

அதைக் காமதேனு கண்டு விரைந்து வந்து மண் புற்றென்று நினைத்துத் தன் கொம்பாற் குத்த, கொம்பு சிவ லிங்கத்தில் பட்டு இரத்தம் பீரிட்டதாகவும், அதற்குக் காமதேனு அச்சமும், வியப்பும்கொண்டு வருந்த, சிவபிரான் இடபாரூடராய்த் தோன்றி காமதேனுவுக்குக் காட்சியளித்து வேண்டிய வரமும் கொடுத்ததாகவும், இன்னம் அநேக திருவிளையாடல்கள் இத்தலத்தில் நடந்ததாகவும் தலபுராணம் கூறுகிறது. இத்தலபுராணத்தின் அருமை பெருமைகள் அன்பும் புலமையும் உள்ளவர்கள் மனத்தைக் கொள்ளைகொள்ளும் தகையின. இத்தலபுராண ஆசிரியர் திருவாவடுதுறை ஸ்ரீ கச்சியப்ப முனிவர் ஆவர்.

"விரித்தசெஞ் சடையாட வதனசந்திரனுட விரிகமல நயனமாட, வெண்முறுவ னிலவாட நண்ணுதமருகமாட வீசுமொரு செங்கையாடத்; தரித்தபுலி யதளாட அபயகர மாடஅணி தங்குதோ டூசலாடத், தாங்குநா லாடமே லோங்குநீ ராடவொளிர் தண்பவளமேனியாட; உரித்தகரி யுரியாட உரகக் கணமாட உபயபரி புரமுமாட, ஒருபத மெடுத்தாட வொருபத மிதித்தாட உள்ளேமகிழ்ந்துசற்றே; சிரித்துமலை மங்கைகொண் டாடநின் றுடுமுன்திருநடனம்" என்னும் செய்யுட்கிலக்கியமாய் மார்கழித் திருவாதிரையினும், பங்குனி உத்தரத்தினும் பாலிக்கும் ஸ்ரீ நடராஜப் பெருமான் காட்சி காண்போர்களின் பிறவித்துன்பம் போக்கிப் பேரின்பப் பேறுதவும் ஐதிகமாட்சி சான்ற தெய்வீகக் காட்சியாகும்.

இத்தலம் கோயமுத்தூரிலிருந்து மேற்கே மூன்று கல் தூரத்திலுள்ளது.

III நூல்.

பட்டிவிநாயகர் பதிகம்:— "நாரையூர் நம்பி" என்னும் மூன்றும் கவியின் முற்பாகம், இறைவனைப் பூசனை ஏற்கவும் திருவருள் வாக்குப் பாலிக்கவும், வேண்டும் சாதனைத் தன்மையும், அதன் பின் தாமியற்றும் தலவிளக்கச் சேவையும் பரோபகார நலமுமாதிய சாத்தியத் தன்மையும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் காட்டுகின்றது. "பிறதலத் தண்ணிடா தருளாற் பிறவாநெறி மேவ வம்மின்" என்னும் ஒன்பதாவது பாட்டின் பிற்பகுதி ஆன்மாக்கட்குப்போக இச்சைகளைக் கொடுக்கும் பிறவாகிய தலங்களினும் முத்திநல்கும் பிறவாநெறியாகிய தலமகிமையைத் துலக்குகின்றது. "ஒன்றதே யருட்பேரூர் வழியதற்கும் பர்கீழ், திசையாறெனு மூலர்தம் மின்றமிழ்ச்சொற் கிலக்கியப்பே ரையூர்" என்னும் கக-ம் செய்யுள் திருமூலர் திருமந்திரத் திரத்தின் இலட்சியத்தை விளக்கிக் காட்டுகின்றது.

பட்டீச்சுரர் பதிகம்:— கூ-வது "அறவா" என்ற கவி பெறுதற்கரிய மனிதப் பிறவி வாய்க்கப் பெற்றவர்கள் வேண்டற்குரிய பொருள் இதுவேயென்னும் ஆசிரியர் முடிபாகிய துணிபை எம்போல்வார்க்கு எளிதான தெளிவாய்க் கொண்டமைய உபதேசிக்கின்றது. "கலி யினுமிக்கருள் விரவிக்குறை வின்றிப், பரிதித்தகை பெறுபேரையெம் பட்டிப்பெரு மானே" என்னும் க௦-வது கவியின் பிற்பாகம் குன்றாத தலமகிமையை உவமைகொண்டு உணர்த்துகிறது.

முருகக் கடவுள் திருப்புகழ்ப் பதிகம்:— ௩-வது செய்யுள் இறைவன் ஆன்மாக்களுக்கு மரணகாலத்துபதேசிக்கும் முறையை "மடிவுறு நாள்காதினம்பன் மறையெழு வாயாகு

மின்ப, மறைபுகல் பேரூர்'' என முழக்குகிறது. "விரி மலர்வி ருக்கவின மரசவன மொப்பிலுயர், வேதாவு ருத்திர னன் மாலாமு மைக்கடவு, ளுருவெனமி சைக்கவிகை முறை யின் வளர் வுற்றலர்பெய், தோவாம துக்கொடபி டேகாத ரத்தொழில் செய், வியனெடிசை பறவையின் மிகுதுதிமு ழக்கிகழ், வேதாக மத்துறைகொள் பேரூர்'' என்னும் ௬-வது செய்யுள் அரசவனமாகிய இதன்கணுள்ள மற்றைய மரங்களும் மும்மூர்த்தி வடிவமாகிய தம் அரசை அபிஷேகம் புரிந்து மலர்களுகுத் தர்ச்சனை செய்து மானிடர்களுக்குப் படிப்பினையாகத் தேற்றுகின்றதனை வர்ணனை போற் காட்டு கின்றது. "முனங்கணர் சிவையோடே, பள்ளுக்கார்மேனி, கொண்டுசெய் நெல்வித்தோ ராடல்கண்டவிர்'' என்னும் அ-வது செய்யுள் சுந்தரமூர்த்தி சுவாமிகள்பால் அம்மையப் பர் பள்ளர் பள்ளிகளாய் விளையாடிய தன்மையை நினைப்பூட்டு கிறது. "ஆவினன்குடி போலாடனீடிய மேன்மைதங்கிய பேரூரின் மேன்முக வாலயந்தனில் வாழ்வான வானவர்'' என்னும் ௧௨-வது செய்யுள் திருவாவினன் குடிபோல் மேன் முகக் கோயில்கொண்ட காட்சியை உவமை முகத்தாற் காணத் தெரிவிக்கிறது.

நடராஜர் பதிகம்:— "கனவிலொரு காலளித்த காட்சிகன்ம மாயைக், கருவிகர ணங்களெலாங் கரைத்திருள்போ யொழிய, நனவிலொரு காற்காண நல்கிடுவாய்'' என்னும் ௪-வது கவி ஆசிரியர் நடராஜப் பெருமான் கனவிலளித்த காட்சியைப் பொய்யென்றே தள்ளாமலும், மெய்யென்றே துள்ளாமலும் நடுநிலையில் நின்று நனவிற் காண விழையும் சமரச பத்தி ஞானச் சிறப்பை விளக்கும் பெற்றி உபாசகர் மகிழத்தக்கதாகும். "விள்ளிருக்கு முடிகளெலா முரைத்

திடுஞ் சொல்லற்று" என்னும் அ-வது செய்யுள் வேதங்கட் கெட்டாமலமைந்த சுத்த ஞானமயத் தன்மையையும் தெளிவிக்கின்றது.

நாராயணமூர்த்தி பதிகம்:— ரு-வது செய்யுள் "தற்போத, விலைகொடுத்தார்க் கீயுமணி முகிலுருவா" என்றமை, "அறிவொன்றறநின் றறிவா றறிவிற், பிறிவொன்றற நின்றபிரான்" என்னும் கந்தரனுபூதியை நினைப்பூட்டுகின்றது. அ-வது செய்யுள் அருளே மாயையாகவும், மாயையே அருளாகவும் மாறி ஆன்மாக்களது பத்திகன் மங்கட்கேற்ப விளையாடும் அத்துவித இலக்கணத்தைத் தெரிவிக்கின்றது.

பச்சைநாயகி சந்தக் கவி:— தம்மைப் பாலரெனக் கொள்ளும் பத்தர்களுக்குத் தான் அன்னையென நிற்றலும், அன்னையெனத் துதிக்கும் பத்தர்களைப் பாலர்களென்று காத்தலுமாகிய தன்மையைத் துலக்குகிறது.

அரசம்பலவாணர் பதிகம்:— முற்பாகங்கள் இறைவன் றிருவிளையாட்டின் மகிமைகளையும், பிற்பாகங்கள் தலமகிமைகளையும் பெரும்பான்மையும் குறிக்கொண்டு செல்கின்ற வர்ணனைச் சுவைகொண்டுள்ளன. சந்தக் கவி இருவினையொப்பு மலபரி பாகம், சத்திநி பாதம் ஆதிய பெறுதற்கு இறைவன் பணியே வேண்டுமென் றவாவுகிறது.

அகிலாண்டநாயகி பதிகம்:— ரு, கூ-வது கவிகளில் அன்னையிடத்து உரிமைப்பாலர் கொஞ்சிக் கெஞ்சி வேண்டி மன்றுடுந் தன்மை மிக நயம்பட அமைந்துள்ளன. "அரசம் பலம்பொலி கோயிற் கொண்டநீ யெனக்குட், பலம் பொலிந்

திடப் பரிந்தருள்வாய்'' என்னும் எ-வது கவி அரசம்பல மென்பதை இருபொருள்பெற வருணித்துத் தமக்குத் திரு வருட்பலம் வேண்டி இரக்கும் ஆசிரியரது வேண்டுகோளைக் காட்டுகிறது. சந்தக் கவியில் ஆசிரியர் விண்மண் பாதலங் களிலமையும் போகபோக்கியப் பொருட்டுக் கன்மத்தாலுந் தப்படும் தமதுயிரைக் கவணிலேந்து கல்போலென்றது மிக மிகப் பொருந்து முவமமாகும்.

கும்பாபிடேக வாழ்த்துக்கவி ஈற்றடியில் மீன லக்கினத் திற் கும்பாபிஷேகங் கொண்டுள்ள அகிலாண்டேஸ்வரியின் "விழி மீனம் ஊன்று இலக்கு இனம் மருவி'' என்று சொல் பொருள் மடக்காதிய நயங்கள் பெற்றுள்ளமை புலவர்கட் கின்பமூட்டுவதாகும்.

பட்டி நாயகமாலை ஒவ்வொரு செய்யுள்களிலுமுள்ள முற்பாகங்கள் அனைத்திலும் ஆசிரியர், மனத்தைக் கனிவிக்க வல்ல பத்திநயங்கள் நிரம்பிய பொருள்களுஞ் சிறந்த மொழி களைக்கொண்டு இறைவன் தமக்களித்துள்ள நலங்களையும், பெறவேண்டும் வரங்களையும் மன்றாடி விண்ணப்பிக்கும் முறை கற்போர் மனத்தைக் கனல்மெழுகாக்கும் இன்ப அன்புச்சுவை துளும்புவனவும், பிற்பாகங்கள் பேரூர்ப் புரா ணத்தின் சாரங்களைக் கவர்ந்து வைத்துள்ள கண்ணாடித் தன்மையினவுமாகும். ஆதலின் இம்மாலையின் கண் செய்யுள் ஒவ்வொன்றிலுமுள்ள நயங்களை யெழுதப்புகின் மிக மிக விரியுமென்றும், எழுதாது விடுப்பின் என் மனமே சமா தானம் அடையாதென்றும் தோன்றலின் இதனைப் படித் துணர்வார்க்கே அப்பணிவிடையை அளித்து மேற்செல் வேனாக.

IV நூலாசிரியர்:

1. இந்நூலாசிரிய சுவாமிகள் நந்தன-ஹு சித்திரை-மீ 8-ம் தேதி சோமவாரமும் சப்தமித் திதியும் பூராட நட்சத்திரமும் கூடிய சுப தினத்திலே இரவு 51½ நாளிகை அளவிலே சிரவணம்பட்டி என்னும் ஊரினரும், கொங்கு வேளாண் குடியினருமாகிய உயர்திருவாளர் வெங்கிடசாமிக் கவுண்டரையும், ஸ்ரீமதி குட்டியம்மாளையும் தமது தூல தந்தை தாயாகக்கொண்டு கங்காகுலம் விளங்க அவதரித்தவராவார். இவருக்கு இடுகுறிப்பெயர் கந்தசாமி.

2. இவர் சிறு வயதிலேயே அடியார் பத்தி, குருபத்தி, தெய்வ பத்திகளில் சிறந்து விளங்கியதுந் தவிரச் சுமார் 12 வயதிலேயே சிரவணபுரம் கௌமார மடாலயம் தாபகரும் ஸ்ரீ அகத்திய கலாமிச அவதார மூர்த்தியுமாகிய ஸ்ரீலஸ்ரீ இராமாநந்த சுவாமிகளைக் குருமூர்த்தியாக அடையப் பெற்றார்.

3. இந்நூலாசிரிய சுவாமிகளது கல்வி, அறிவு, ஒழுக்கம், புலமை, பத்தி ஆகிய புண்ணியத் தோற்றங்களைக்கண்டு ஸ்ரீலஸ்ரீ இராமாநந்த குருமூர்த்திகள், ஸ்ரீ அருணகிரிநாதரால் "அதிசயமநேகமுற்ற பழநிமலை" என்றும், இன்னம் அநேக விதமான பத்தி நிறைந்த திருப்புகழ்ப் பாடற்பெற்ற பழநித் தலத்திற்கு ஷ சுவாமிகளை வரவழைத்து ஸ்ரீ முருகப் பிரான் சந்நிதானத்தில் இவரது 30-வது வயதிலே அக்க மணி மாலையும் கல்லாடையும் ஆகிய சந்நியாசத் திருவேடம் தந்து இவரை வாழ்த்தி அத்துடன் சிரவணபுரம் கௌமார குருபீட மடாதிபத்திய பட்டமும் சூட்டி கந்தசாமி சுவாமிகள் என்னும் திருநாமமும் சூட்டியருளினர்.

4. இந்நூலாசிரிய சுவாமிகளால் இயற்றப்பட்ட தல புராணங்களும் தோத்திர நூல்களும் பல. அவற்றில் சில மாத்திரம் இங்கே குறிப்பேனுக. அதாவது அன்னூர் என்கிற அன்னியூர்த் தலபுராணம், கோயிற்பாளையம் என்கிற கௌசைப்புராணம், பக்தமான்மியம், மருதமலைப் பிரபந்தம், இரத்தினசலப் பிரபந்தம், வெள்ளியங்கிரிப் பிரபந்தம், அவிநாசிப் பிரபந்தம், குருந்தாசலப் பிரபந்தம், பழநிமலைப் பிரபந்தம், பேரூர்க் கோவை ஷை கலம்பகம், ஷை சிலேடை வெண்பா, பச்சைநாயகி மாலை, சங்கராச்சாரியார் வைபவம், இராமாநந்த சுவாமிகள் பிள்ளைத்தமிழ், சாந்தலிங்க சுவாமிகள் பிள்ளைத்தமிழ், பத்திராசலப் பிள்ளைத்தமிழ், பச்சைநாயகி பிள்ளைத்தமிழ் முதலியனவாம்.

5. இந்நூலாசிரிய சுவாமிகள் வெள்ளிக்கிழமை தோறும் சிரவணபுரம் கௌமார மடாலயத்தில் உபதேச உபந்நியாசம் செய்வதை நேரில் கண்ணுறும் பத்திமான்களுக்குத்தான் அதன் பெருமை தெரியும்.

6. மேலே காட்டிய நூல்களில் பக்த மான்மியம் என்பது 7371 செய்யுள்களால் காத்தற் கடவுளாகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவினுடைய பக்தர்களின் பெருமைகளை விளக்கிக் காட்டும் பனுவலாம். இக்காவியமானது ஆராய்குநர்க்கு இவருடைய பக்தியின் திறத்தையும் சமரச அறிவையும் காட்டுவதுடன் முன் கந்தபுராணம் இயற்றிய ஸ்ரீ கச்சியப்ப சிவாச்சாரியாரோ அல்லது பெரியபுராணம் இயற்றிய சேக்கிழார் சுவாமிகளோ அல்லது திருவிளையாடல்புராணம் இயற்றிய பரஞ்சோதி முனிவரோ என்கிற ஐயப்பாடு நீங்கி எல்லாம் வல்ல இறைவனும் ஸ்ரீ முருகப்பிரான் கலாமிச அவதார மூர்த்திதான் இவர் என்பதை விளக்குவதாகும்.

7. ஷை சுவாமிகள் அடியேனுக்கும் இன்னம் அநேக அன்பர்களுக்கும் சற்குரு பீடமென்பது நான் சொல்லாமலேயே விளங்கும். சுவாமிகளின் பெருமைகளைப்பற்றி விரிக்கிற் பெருகும். இதற்கு முன் அநேக நூல்களில் அரும் பெரும் புலவர் பெருமக்கள் எழுதியுள்ள முகவுரைகளிற் பரக்கக் காணலாம்.

8. கோவை முனிசிபல் ஐஸ்கூல் தமிழாசிரியரும் இந்நூல் ஆசிரிய சுவாமிகள் மாணுக்கருமாகிய உயர்திருவாளர் வித்வான் கோவை கு. நடேச கவுண்டர் இந்நூலாசாரிய சுவாமிகளால் இயற்றப்பட்ட சாந்தலிங்க சுவாமிகள் பிள்ளைத் தமிழ் நூலுக்குக் கொடுத்த சாத்துகவிகளின் ஈற்றிலுள்ள 7-வது செய்யுளாகிய

"பவப்பிணிக்கு மருந்துளிருட் பகைக்குவிளக் ககத்துறவோர்
தவத்துணைசெந் தமிழ்க்கிலக்குச் சந்தவண்ணக் கருவூலம்
சிவத்திலைமைப் பிணித்திருத்துஞ் சிரவைநகர்க் கந்தமுனி
தவப்பெரிய னருட்பெருக்கிற் றருமருமைத் தமிழ்க்கவியே"

எனப் பத்திப் பெருக்கிற் றருமருமைத் தமிழ்க்கவியையே வழிமொழிந்துகொண்டு மிகவுரையாமல் எனது முகவுரையை முடித்துக்கொள்வேனுக.

நூல் வெளியீட்டாளர்:

இப்பிரபந்தத்தின் அருமை பெருமைகளைப் பாராட்டித் தமிழுலகிலுள்ள அறுவகைச் சமயத் திருத்தொண்டர்களும் புலவர் பெருமக்களும் கைக்கொண்டு போற்றி உண்மைப் பயனடையுமாறு தமது புண்ணியப் பொருள் கொண்டு அரிய புத்தகங்களாக்கி வெளியிடும் பாக்கியம் படைத்த

சிரவணபுரம் கௌமாரசபை அடியவர்களிலொருவரும் கோவை சிவராத்திரி வெங்கிட்டராம செட்டியார் குமாரத்தியுமாகிய கௌமாரச்செல்வி ஸ்ரீமதி நாகம்மாள் என்னும் பெயரிய அம்மையார்க்கு பத்தி ஞானங்களாகிய இகபரசுக சாதனங்களைத் தந்தருளுமாறு எல்லாம் வல்ல சற்குரு மூர்த்தியையும் ஸ்ரீ பச்சைநாயகி சமேத பட்டீச்சுரரையும் வள்ளி தெய்வயானை சமேத ஸ்ரீ முருகக்கடவுளையும் முன்னிப் பன்முறையும் வணங்குகின்றேன்.

> "குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
> கற்றறிந்த மாந்தர் கடன்".

சுபம்! சுபம்!! சுபம்!!!

இங்ஙனம்,

கணபதி, 27—3—1941. அடியார்க்கடியேன்,

க. சி. ஓதியப்பன்.

குருபாதமே கதி.

உ

குருவே துணை.

சாத்து கவிகள்.

சிரவணபுரம் கௌமார மடாலயம்
ஸ்ரீ தண்டபாணி சுவாமிசந்நிதி பூஜைப்பணி

ஸ்ரீ சின்னச்சாமி சுவாமிகளியற்றியது.

இரட்டையாசிரிய விருத்தம்.

மகத்துவவ கத்தியன் கலைகொள்குரு வாமிரா
மானந்த நாதனிருதாள்
வாரிசமலர்த்துணைக ளேயுற்ற துணையென்ன
வாரியன் பாலிடைவிடா
தகத்துவப் பொடுபோற்றி டுங்கந்த சாமியா
மபிதான முற்றமேலோ
னருணலப் பேரைபொலி பட்டீச்சு ரன்பச்சை
யம்மைநட ராஜன்மாயன்
சுகத்துவப் பட்டிகொள்வி நாயகன் செவ்வேள்
சுபக்கால வேச்சுரனுமை
துதிப்பதிக வினமோடு சந்தவண் கவிகளணி
தோய்தலப் பெருமையாவுஞ்
சகத்தினர்கொ ளப்புரியு மாலையையு முயர்புத்
தகங்களென வச்சிலிட்டுத்
தருகௌமா ரச்செல்வி கோவைநா கம்மையிசை
தவபலமெய் தினணன்கரோ.

சிரவணபுரம் கௌமார மடாலயம் சபைப் பூசைப் பணியினர்

அரங்கமுத்து ஐயா இயற்றியன.

எண்சீர் விருத்தம்.

தமிழ்மணங்கொள் பொதியைவரைத் தவமுனிதன் கலையாய்த்
தரணியுய்ய வருராமா னந்தகுரு மலர்த்தா
ளமிழ்தினிலு மினிதருந்தி யானந்த முற்றே
யடியார்க்கின் பருள்கந்த சாமிதவ வள்ளல்
சிமிழ்த்தனஞ்சேர் பேரைமர கதவல்லி பாகந்
திகழ்பட்டீச் சுரர்சுதர்க ளச்சுதர்க்குங் கழற்று
ளிமிழரசம் பலவாண ரகிலாண்டேச் சுரிக்கு
மியற்றுதுதி களைப்படித்தோ ரின்பாய்வாழ் வாரே.

எழுசீர் விருத்தம்.

அருமையாம்பாட லச்சினிலிட்டே யருள்மணம் பெற்றதா ரென்னிற், றிருவமையிராமா னந்ததேசிகன்றாள் சிரத்தகத் தமைத்தினி யோர்தாய், கருவமையாதாண் டருள்குரு பரனே கரையிலாத் தொண்டர்வாழ் வென்னுந், தருநிக ரெங்கள் நாகம்மையார்தம் தவத்தையார் தெரிந்துவிள் வாரே.

இந்நூலாசிரியர் மாணுக்கர் சிரவணபுரம் கௌமார மடாலயம் புஷ்பப் பணிவிடை

குமாரசாமி ஐயா இயற்றியன.

எண்சீர் ஆசிரிய விருத்தம்.

அருள்மலிரா மானந்த மாமுனிவ ரென்றிவ்
வகிலமெல்லாம் புகழ்ஞான வாதித்த மூர்த்தி
யிருள்மலியு மாந்தருய்யத் தங்கிரண மீந்தா
லெனவருமென் னுரியர்கந் தானந்த வள்ளல்

தெருள்மலியுந் திருவாக்சாற் றேவர்புகழ்ந் தேத்துஞ்
சீராரும் பேரைநகர்த் தேவினத்தின் சிறப்பைப்
பொருள்மலியும் பாக்கொண்டு பேசிமுடித் திட்டார்
போற்றியுள்வார் பரகதியிற் பொருந்திடுவர் மாதோ.

வெண்பா.

சற்குரவன் சேவடியே தஞ்சமெனும் பக்தியினல்
நற்குணமெல் லாநிறைந்த நாகம்மை — கற்குமன்பர்க்
கச்சினிவிட் டிந்நூலே யார்வமுடன் றந்துலகில்
மெச்சுபுகழ் பெற்றிட்டார் மேல்.

வித்வான் கோவை

கு. நடேச கவுண்டர் அவர்கள் இயற்றியன.

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

கருப்பேரூர் பல்கோடிக் கணக்கினுற னீங்குநெறி காட்டுமேன்மைத், திருப்பேரூர்ப் பட்டிவிநா யகனிறைவ னறுமுகவன் றிருமான்ஞானப், பொருப்பேரூர் முலையுமையென் பவர்த்துதித்தொண் பிரபந்தம் புனைந்திட்டான்பூ, மருப்பேரூர் முகிறவழு பொழில்புடைசூழ் சிரவையர்கோன் வாழிமாதோ. (க)

எந்தப்பா வினுஞ்சிறந்த திளம்புலவர்க் கிசைக்கவிசை யாதவண்ணச், சந்தப்பாப் பாகந்தப் பாமலிமைப் பினிலெனைத்துஞ் சாற்றவல்ல, கந்தப்பா தந்தபிர பந்தப்பா வினிய கந்தப் பாகாங்கற்றோர், பந்தப்பா சங்களொழிந் திகபரசௌ பாக்கியங்கள் படைப்பராலோ. (உ)

இந்நூலாசிரிய சுவாமிகள் மாணுக்கர்

பாப்பையா என்றழைக்கிற சிரவணபுரம் மருதாசல ஐயா

அவர்கள் இயற்றிய

கட்டளைக் கலித்துறைகள்.

கொங்கில் சிரவைரா மானந்த மூர்த்தி குளிர்மலர்த்தாள்
கங்குல் பகலிடை யேத்துமெய் ஞானக் கதிரென்றுஞ்சீர்
பொங்கு கவிபொழி காரென் றுஞ் செவ்வேற் புயத்தனென்று
மெங்கும் புகழ்தங்குங் கந்தசா மிப்பே ரெமதிறையே.

பேரூர்வாழ் பட்டிப் பெருமான் முதற்றேவர் பீடமைபாக்
காரூர் பவனூர் மருந்து முவட்டிடக் கட்டியிட்டார்
சீரூர்நா கம்மை தனமிட்டுப் புத்தகஞ் செய்தளித்தார்
பேரூ ரறுமுத்தி பேரன்பில் வாசிப்போர் பெற்றிடவே.

கோயமுத்தூர் கணபதி பிராஞ்சு போஸ்ட் மாஸ்டர்

R. திருமலை அய்யங்காரவர்கள் இயற்றியன.

வெண்பா.

பட்டினமாம் பேரூர்வாழ் பட்டிலிங்கர் பச்சையம்மன்
பட்டிவிக்கி னேச்சுரர்வேல் *பாணிசங்கம் — §வட்டித்தல்
சார்கனக சங்கனிவர்க் காவளித்தான் சந்தப்பா
தார்கந்த சாமி தவன். (க)

சிரவைக்கௌ மாரத் திருச்சபை வாழ்சிற் பரனெனுஞ்சீர்
உரவைவ ளர்ப்போ னொருகந்த சாமி யுறுவனருள்
பிரபையார் பேரூர்ப் பிரபந்த மச்சிற் பிறங்கவைத்தாள்
†பரவையாம் பண்பமை கோவைநா கம்மாள் பவித்திரையே.

---

* பாணி—கையிலேந்தியவர், மத்திமதீபம்.
§ வட்டித்தல்—தாளம் போடுதல். † பரவை—கொடை.

கோயமுத்தூர் — விளாங்குறிச்சி, நூலாசிரியர்

வி. நா. மருதாசலக் கவுண்டரவர்கள் இயற்றியன.

கட்டளைக் கலித்துறை.

கோலக் குருதண்ட பாணிகண் ணேக்கிற் குளித்துவக்கும்
சீலக்கௌ மாரரா மானந்தன் சீட சிகாமணியாய்
மேலச் சிதம்பரப் பேரூரின் மேவும் விமலரும்பர்
மேலற் புதத்துதி கந்தசா மிக்கவி விண்டனனே. (க)

நேரிசை வெண்பாக்கள்.

பட்டித் தலம்வாழ் பலதெய்வ தோத்திரங்கள்
கட்டிக்கற் கண்டமிழ்திற் கட்டியிட்டான்—மட்டிலிசைக்
கொங்கிற் சிரவைக்கௌ மார குருபீடம்
தங்குகந்த சாமி தவன். (உ)

அன்ன புலவோ னனேகசெய்யு ணூலினங்கள்
பன்னயங்க டோயப் பகர்ந்துசந்த—நன்னயத்த
வண்ணங் கனிந்துதிரு வாய்மலர்ந்தா னற்கவியும்
திண்ணக் குருவடிசிந் தித்து. (ந)

பேரூரில் வாழுமெங்கள் பேழைவயிற் றெந்தைகந்தன்
சீரூர் சிவனுமைமால் சேவடிக்கும்—ஊரூர்தோ
றன்பரின மேத்தியுய்ய வாக்குகந்த சாமியின்பே
ரின்பகவி மாலையொன்ப தே. (ச)

தேவைக் குருவைத் திருத்தொண்டர் தம்மையன்பால்
சேவைசெய்யுங் கௌமாரச் செல்விகல்விக்—கோவைநகர்
நாகம்மை யார்பேரூர் நற்றெய்வப் பாக்களச்சிட்
டேகண்டா ரீகையின்ப மே. (ரு)

இந்நூலாசிரியர் மாணாக்கர் சிரவணம்பட்டி
தம்பி என்கிற மருதாசல ஐயா இயற்றியது.

ஆசிரியப்பா.

காஞ்சிமாநதிக் கரையிடைமருவிய
திஞ்சுவைக்கனி வளத்திருப்பேரூரி
லமர்ந்தபட்டீச னம்பலவாணன்
இமயமின்னுதிய வேணையகடவுளர்க்
கின்சுவைத்தமிழ்ப்பா வியம்பினரெமையாள்
பொன்சரணத்துப் புண்ணியமூர்த்தி
கந்தசாமிப்பேர் கவினுறக்கொண்டோ
ரந்தமாண்கவிகளை யச்சியற்றுவித்துப்
புத்தகமாக்கிப் புண்ணியச்சீர்
மெத்தவுமடைந்த நாகம்மையார்மேலே.

கோயமுத்தூர் — கணபதியிலிருக்கும் மணியம்
கிருஷ்ணய்யர் குமாரர்
G. K. இராமசாமி அய்யர் இயற்றியன.

கட்டளைக் கலித்துறை.

பட்டித் தலத்திப மாமுகன் மாலோன் பரமசிவன்
இட்ட முருகவே ளன்னை யுமையா ளிவர்களுக்குத்
திட்ட முறுசெந் தமிழ்த்தார் பதிகமுஞ் செய்தளித்தான்
மட்டவிழ் காச்சிர வைக்கந்த சாமியா மாதவனே. (க)

நேரிசை வெண்பா.

தாரையென நாற்பாவுஞ் சாற்றுகந்த சாமிமுனி
பேரைநகர்த் தேவர்மிசைப் பேசியநூ — லாரு
மறிந்துபய னெய்துமா றச்சிலிட்டாள் கோவை
செறிந்தபுகழ் நாகம்மை தேர்ந்து. (உ)

கோயமுத்தூர் — ஸ்ரீ இராமானந்த வைத்தியசாலை

K. R. சின்னப்ப செட்டியார் இயற்றியன.

எழுசீர் விருத்தம்.

பூமகடமக்கோ முகமெனப்பொலியும் புண்ணியக் காஞ்சிவாய்ப் பேரூ, ராமதிற் பொருந்துந் தெய்வங்கடமக்கே யன்புட னெவ்வொரு பதிகம், சேமமார்தலப்பு ராணமாஞ் சாரந் திகழ்துதி மாலையுஞ் சொன்னான், காமமார் சோலைச் சிரவணபுரம்வாழ் கந்தசா மிக்குருபரனே.

வெண்பா.

திருப்பேரூர்த் தோத்திரத்தைச் சீருடனே யச்சில்
விருப்போடு சேர்த்தளித்தாண் மேன்மைத்—திருக்கோவை
யூர்வாழும் நாகம்மை யுண்மையுடன் சற்குரவன்
சீர்பாதத் தன்புமிகுந் தே.

கணவாய்ப்பாளையம் வைத்தியம்

இராமசாமி ஐயா இயற்றியன.

எழுசீர் விருத்தங்கள்.

திருவளர்சிரவைக் கௌமாரமன்றிற் றேசிகன் றிருவடித் துணையை, மருவிவாழ்கந்தா னந்தமாமுனிவன் மதிதவழ் சோலைசூழ் பேரூர், கருணைபட்டீச னம்பிகைசெவ்வேள் கய முக னடேசனு ரணற்கும், திருப்புகழ்பதிக மாலையும்பகர்ந் தான் செகமதிற் புலவர்போற்றிடவே.

சித்திமுத்தியானை வேட்டவர்க்கருளும் சீரரசம்பல வாணன், சுத்தசைதன்ப வுபயதாடமக்கும் சுகமுறுபதிகநன்

கறைந்தான், புத்தமுதென்னத் தொண்டர்கள்பருகிப் போற்றிசெய் பலதெய்வப்பாக்கள், புத்தகவடிவா நாகம்மை செய்தே புண்ணியப் பயனுடைந்தாளே.

செட்டிபாளையம் S. I. R.

திருவாளர் R. N. கல்யாணசுந்தர கவுண்டரவர்கள் இயற்றிய

கலிவெண்பா.

பூமேவு கொங்கிற் புகழ்கின்ற போதிவனக்
காமேவு நன்னகரிற் காஞ்சிநதி — தாமேவுந்
தூய வருட்குறியாந் தொன்மைச் சுயம்புலிங்கம்
நேயத் துடனிலங்கும் நேர்மையது — வாயதனுல்
மூர்த்திதலந் தீர்த்தமென முன்னோராற் பாராட்டும்
நேர்த்திகொண்ட பேரூரில் நின்றுவளர் — கீர்த்திமிகு
பட்டி விநாயகர்க்கும் பட்டீச சுரர் தனக்கும்
கட்டிளமை கொண்டமுரு கன்றனக்கும் — இட்டமுள
பச்சை மரகதமாம் பார்ப்பதிக்குங் காலவரால்
வச்சவர சம்பலத்தின் வாணருக்கும் — நச்சும்
அகிலாண்ட ஈஸ்வரிக்கும் அம்பலத்தி லாடிச்
சகலாண்ட முய்வித்த தக்கோன் — பகலாண்ட
சூரியனுஞ் சோமனெரி தோய்ந்ததிரி நேத்திரத்தான்
நாரியொரு பாகர் நடராஜர் — பேருக்கும்
ஆதிநா ராயணர்க்கும் ஆனபதி கஞ்சந்தம்
போதிவனப் பேரூர்ப் புராணத்தின் — நீதியதைச்
சொல்லுபட்டி நாயகமா லேப்பனுவல் சொல்லியவன்
நல்லசிர வைப்பதியில் நண்ணியவன் — வல்லகவு

மாரவடி யார்க்கருளும் மாதவத்துச் சீலத்தன்
சேருமடி யாருளத்தைத் தேற்றியருள் — காருணியன்
பல்லவைக்கு மேலானோன் பாரிற் பிறவியெனும்
தொல்லை யொழித்திட்ட தூயவான் — நல்லசிவ
சாதனத்தை நீற்றைத் தரணிதனி லேபொலியப்
போதனையிற் சைவத்தைப் போற்றுபவன் -- சாதனையில்
அண்டபிண்ட மொன்று யனுபூதி யிற்றேர்ந்தோன்
கொண்டலென நாற்பாவை கொட்டுபவன் — எண்டிசையும்
நீங்காப் புகழ்வீசும் நேசவிரா மானந்தன்
பாங்காரும் பாதமலர்ப் பற்றுடையோன் — தீங்கார்
கொலைபுலையை நீக்குவதே கொள்கையெனக் காப்புப்
பலர்கையிற் கட்டிவைக்கும் பண்பான் — மலைதோறும்
தங்குகந்த சாமிபதம் தான்றுதித்துப் பூசிக்கும்
நங்கந்த சாமிதமிழ் நாடியே — எங்கெங்கும்
மெச்சிப் பலர்புகழ மேலாம் பயனடைய
அச்சிற் பதிப்பித் தளித்திட்டாள் — இச்சையுடன்
கோகனக மாதருளைக் கொண்டாள் — புகழ்க்கோவை
நாகம்மை வாழ்கநிதம் நன்று.

பாயிரம் முற்றிற்று.

தெய்வமே துணை.



ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள்,
கௌமாரமடாலயம்,
சிரவணபுரம்.

உ
கணபதி துணை.

ஸ்ரீ பட்டிவிநாயகர் பதிகம்.

காப்பு — வெண்பா.

பாரூர் புகழ்ப்பேரூர்ப் பட்டி விநாயகமெய்ப்
பேரூர்தெய் வத்துதிப்பாப் பேசுதற்கு — நாரூர்
மனமகலா தோங்குமிரா மானந்த வள்ளல்
வனசமலர்ச் சேவடிகா வல்.

எண்சீர் விருத்தங்கள்.

துதிக்கைமாமுக முந்திருக்கண்களுஞ் சோதிமேனியுஞ் சுந்தரக்கைகளு, மதிக்கைதீர்பத மாதியுமென்சிறு மனத்தினுண்மற வாதருள்செய்குவாய், கதிக்கைகொண்டுதன் னுட்படிவார்க்கெலாங் காஞ்சனங்கதிர் மாமணியீந்தயன், விதிக்கைமாற்றருட் காஞ்சியம்பேரையூர் மேயபட்டி விநாயகமூர்த்தியே. (க)

கரவுதோய்புன் புலன்வழித்தோன் றுபொய்க் காட்சியிற் கலங் காதுனைநாடியே, வரவுபோக்கற் றமைந்திடுமெய்யருள் வாரிமூழ்கிட வைப்பதென்றோதுவாய், பரவுமன்பர் பவக் கொடும்பாலையுட் பட்டிடாமலப் பாலைக்கப்பாலுற, விரவு தானம் பொழிந்தருட்பேரையூர் மேயபட்டி விநாயக மூர்த்தியே. (உ)

நாரையூர்வரு நம்பிதன்பூசைபோ லுயினேன்பணி கொண்டு நின்ஞானமெய்ச், சீரையூர்தொறுஞ் சென்றுசென் றேத்திடச் செய்யிலின்பந் திகழ்ந்தவந்திருமே, காரையூர்மக வானயன்மான்முனோர் கண்டுவந்திடு காட்சிகொள்பேரருள், வீரையூர்புய லூர்பொழிற்பேரையூர் மேயபட்டி விநாயக மூர்த்தியே. (ங)

மாயவஞ்ச விழிமடமாதரை வாவிப்பற்றிடு மாநிலந் தோய்பதப், பேயனேனைக் கணித்தருள்செய்யிலுன் பேரருட் கடற் பேர்சிறப்பெய்துமால், தூயதொண்ட ரிடிநிகர்க்குந் துதி சோத்திரங்கொள் சுரர்களைந்தாருவின், வீயகத்துவப் பாற்பொழிபேரையூர் மேயபட்டி விநாயகமூர்த்தியே. (ச)

கண்ணிலாக்கவி போலுலகாமிருட் கானிற்றுவிக் களைக்குமென்னெஞ்சினைத், தண்ணிலாவுன் பதவருள்வீட்டி னிற் றங்கியின்பந் தழைந்திடவெண்ணுவாய், பண்ணிலாந் தமிழ்ப் பாடல்விண்டேத்துமெய்ப் பத்தர்நெஞ்சகப் பண்பிற் குவிந்துயர், விண்ணிலாவுஞ் சிகரிகொள்பேரையூர் மேய பட்டி விநாயகமூர்த்தியே. (ரு)

நற்றவப்பெரி யோர்புகழ்மெய்கண்ட நாதனுய்யவெண் பாவெண்பானுன்குமுன், சொற்றபேரரு ளோயஞ்சலென்

றொரு சொல்லளிக்கிலென் சோகமுற்றொடுமே, பற்றறுந்தவக் கோமுனிகாலவன் பட்டிமாமுனி நாரதனேத்தருள், விற்ற ழைத்து விளங்கியற்பேரையூர் மேயபட்டி விநாயக மூர்த்தியே. (௬)

சூகரத்திழி வாமலபோகமே துய்த்திகத்திற் சுழன்றயர் வேற்கருண், மாகரம்பொருந் துன்வடிவீந்தவிர் வானுளோர் தொழ வைப்பதென்றோதுவாய், மோகமற்ற பிருகுவினற் சுதை மோகமுற்றரக் கப்படிவெய்திய, மேகவாகனற் கின் பருள்பேரையூர் மேயபட்டி விநாயகமூர்த்தியே. (எ)

தந்தைதாய்மக வென்றுழற்றுஞ்சக சாலமெய்யெனத் தட்டழியாமலென், சிந்தையுட்குதி கொண்டநின்ஞான மெய்ச் சேவடித்துணை சென்னியிற்சூட்டுவாய், பந்தைநேர் தன மாதரவாமுதற் பற்றறுந்தவப் பண்பினர்வேட்குமண், விந்தைகொண்டு விளங்கணிப்பேரையூர் மேயபட்டி விநாயக மூர்த்தியே. (அ)

பாவவெஞ்சுரத் திற்புகவீர்க்குமென் பாழ்மனத்தைநின் பாதத்தமையவைத், §தோவமென்றுட லந்திகழ்நிட்டையி லோங்கவைக்குந ருன்னலதுள்ளரோ, வாவனல்கி யலேக்கும் பிறதலத் தண்ணிடாதரு ளாற்பிறவாநெறி, மேவவம்மினென் பாலெனும்பேரையூர் மேயபட்டி விநாயகமூர்த்தியே. (௯)

வாதிக்கும்வினை யாற்றளர்வேன்றனை வாதிபொப்ப மதித் தருள் வள்ளனீ, சோதிக்கும்படி யெண்ணிடிலென்பெருஞ் சோகமாற்றுந் துணையெவர்சொல்லுவாய், தாதிக்குந்து தடத் தின்வரான்மடி தாக்கக்கன்றினைத் தம்முட்கருதுபு, மேதிக்

§ ஓவம்—சித்திரம்,

கும்புபெய் பானிறைபேரையூர் மேயபட்டி விநாயகமூர்த்தியே. (க0)

ஒன்றதேயருட் பேரூர்வழியதற் கும்பர்கீழ்திசை யாறெனுமூலர்தம், மின்றமிழ்ச்சொற் கிலக்கியப்பேரையூர் மேயபட்டிவிநாயகமூர்த்தியைக், கன்றகத்துயர் தீர்சுகமெய்திடக் கந்தசாமி கனிவிற்றுதித்தபா, வொன்றகத்துட னேதவல்லார் தமக் கோவிலின்ப முதவிடுமுண்மையே. (கக)

பட்டிவிநாயகர் பதிகம் முற்றிற்று.

தெய்வமே துணை.



உ

சிவமயம்.

ஸ்ரீ பட்டீச்சுரர் பதிகம்.

கலித்தாழிசைகள்.

மதிகொண்டவிர் சடையுஞ்சிவை மருவுந்திரு வுருவுங்
கதிகொண்டமை தாளும்விழி கண்டின்புற வருவாய்
விதிகொண்டமை தருமெண்ணறு வியனூர்பதிக் கெல்லாம்
பதிகொண்டமை தருபேரையெம் பட்டிப்பெரு மானே. (க)

வினையேதிர ளுருவத்தினுள் வெம்பித்தளர்வேனுன்
னனைவாரிசத் திருத்தாட்டுணை நண்ணுந்தினமெதுவே
பிணிதீர்கதி தரல்காட்டிடு பிறவாப்புளி யிறவாப்
பணிமேவிய திருப்பேரையெம் பட்டிப்பெரு மானே. (௨)

வடுவென்றகண் கொடுநெஞ்சினை வடுவேபுரி மடவார்
மடுவென்றுநல் கிடுதுன்பிருண் மடுவீழ்தர லொழியாய்
கடுவொன்றர வுடுவின்பதி கடுக்கைத்துண ரமையப்
படுபுன்சடை யாய்பேரையெம் பட்டிப்பெரு மானே. (௩)

முதுமைத்திரு மறைபற்பல முகங்கொண்டுரைப் பருநின்
புதுமைப்புக ழிடையீடறப் புகன்றேதொழப் புரியாய்
விதுவிற்றிக ழன்னந்துயில் விண்மன்னவன் விழிநேர்
பதுமப்பணை பொலிபேரையெம் பட்டிப்பெரு மானே. (௪)

வியக்குந்திரு ஞானச்சுவை மிளிருஞ்சிவை களபக்
குயக்குன்றணை புயக்குன்றமை குழகாவென வன்பா
னயக்கும்புல வர்க்கைந்தரு நாட்டோர்பணி தருசீர்
பயக்குந்திரு வருட்பேரையெம் பட்டிப்பெரு மானே. (௫)

அறவாவிட வரவம்புனை யப்பாவுனைக் கணமும்
மறவாவர மொன்றல்லது மற்றேதையும் வேண்டேன்
பிறவாநெறி விழையாதிருட் பிறவாநெறி யிடைவீழ்
*பறவாதருக் கருள்பேரையெம் பட்டிப்பெரு மானே. (௬)

திரணம்புரை சிறியேனொரு திக்கேதுமி லேனுன்
சரணஞ்சர ணானேன்புறந் தள்ளாதருள் வள்ளால்
கிரணம்பொலி நவமாமணிக் கிரிநேர்சிக ரிகண்மைப்
‡பரணம்புனை தருபேரையெம் பட்டிப்பெரு மானே. (௭)

---

* பறவாதர்—பேராசையுள்ளார். ‡ பரணம்—கவசம்.

வஞ்சம்பொலி கொடுமாயைசெய் வருத்தஞ்சிறு நாயேன்
நெஞ்சம்பொருந் தியபூரண னினக்கோதுதன் மிகையே
†பஞ்சம்பெறு தருவிற்பர பஞ்சம்பெறு மாவிப்
பஞ்சங்கெடுத் தருள்பேரையெம் பட்டிப்பெரு மானே. (அ)

துயரேதரும் வினையாருடற் சுகமேவிழைந் துழல்வே
னயன்மாலறி வரியாய்நினை யடைந்தின்புறுவேனே
$பயமேநிகர் தகைகொண்டெம பயநீத்தருள் காஞ்சிப்
பயமாரொலி பொலிபேரையெம் பட்டிப்பெரு மானே. (கூ)

அரிதன்சுத ரியமன்றொடர் பால்வாடுமென் னுவிக்
குரிமைக்கதி நின்றாளல துளதோவரு ளுதவாய்
விரியுங்கலி யினுமிக்கருள் விரவிக்குறை வின்றிப்
பரிதித்தகை பெறுபேரையெம் பட்டிப்பெரு மானே. (க0)

கரவொன்றுபுன் புலவேடுவர் கைப்பட்டயர் வேனை
யுரமொன்றுமெய்த் தொண்டன்பர்க ளொடுகூட்டினையாளாய்
சரதத்தவ ரேனோர்களுந் தரிசித்திட மறுகிற்
பரதம்பொலி தருபேரையெம் பட்டிப்பெரு மானே. (கக)

பீடுந்துமை தனம்போற்பசுப் பெறுகன்றடிச் சுவடுங்
கோடும்புனை குழகாவுனைக் கூடும்படி குறியாய்
நீடும்புலி சையினுற்றரு ணிறையாளுடை நம்பி
பாடும்புகழ் பொலிபேரையெம் பட்டிப்பெரு மானே. (கஉ)

இராமானந்தப் பெயர்ச்சற்குரு வெனவந்தரு ளீந்தின்
பாமாலைகொண் டணிபேரையெம் பட்டிப்பெரு மானைச்

---

† பஞ்சம்—ஐந்து. $ பயம்—அமுதம், அச்சம், நீர்.

சாமாறறுத் தாளக்கந்த சாமிச்சுதன் றுதிபா
வாமாதரத் துரைப்பார்சிவ னருளுக்குரியாரே. (கரு)

பட்டீச்சுரர் பதிகம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ
குருவே துணை.

முருகக்கடவுள் திருப்புகழ்ப் பதிகம்.

காப்பு — வெண்பா.

சீரூ ரினத்துட் சிறப்புற் றிலங்குபுகழ்ப்
பேரூர்த் திருப்புகழ்ப்பாப் பேசநல்கும் — நாரூர்
மவுண கரக்குரவன் வான்பதந்தோய் நெஞ்சக்
கவுமாரர் பாதத்து கள்.

நூல்.

தானன தந்ததந்த — தனதானு.

வேதாக மங்களென்று மூடாடி நன்குணர்ந்து
மேலோத லின்றிநின்ற முடியாநீள்
வீரூரு மின்பமிஞ்சுன் வாரீச மென்பதங்கண்
மீதாத ரங்கொடொன்றி மகிழாதோ
ராதார மென்பதிங்கு ருமாயை கொண்டுழன்ற
வாபாச வண்டர்புன்சொல் வழியேபோ
யானுத துன்பினெஞ்ச மாழ்வேனை யன்பினுன்ற
னாளாக வின்றிரங்கி யருள்வாயே
வேதாவ கந்தைகொண்டு பேணுத கன்றவங்கண்
மேலோமெ னும்பதங்கொள் பொருடேரா
வீணச கஞ்செய்பண்பு கூடாது நின்கணென்று
வேசாற வன்றறைந்த கரவேளே
பேதாதி யங்கமுந்தி மேலோ ரிடங்கலந்து
பேராடல் சந்ததஞ்செய் குமரேசா
பீடாய மங்களங்க ணூடோறு மிஞ்சுகின்ற
பேரூர் விளங்கவந்த பெருமாளே.
(க)

தானன தத்ததந்த — தனதானு.

ஊனூர்பு லைக்குரம்பை மீதாவன் மிக்கவொன்றி
யூணுடை பொற்கலன்கள் பெறமாலா
யோவாத வத்தைகொண்டு மாயாம யக்கினெஞ்ச
மூதாரி பட்டுழன்று மடியாதே

தேனுர்பொ ழிற்கொள்குன்று தோறேகி யற்புதங்கொள்
தேவாமு தத்திமிழ்ந்த கவிசூலார்
சீமூத மொத்துவிண்டு நானுமு ணர்ச்சிபொன்று
சீர்மேவி டற்கிரங்கி யருள்வாயே

காஞர்கு றத்திகொங்கை மாலாயெ னைக்கலந்து
காவாயெ னப்பணிந்து மகிழ்வோனே
காகோத ரத்துசன்க ஞோர்துதெ னப்படர்ந்த
கார்மேனி யச்சுதன்றன் மருகோனே

மாஞர கட்டின்மைந்த ஞகாதி ரக்கமிஞ்சி
மாவீட ளிக்கவந்த குருநாதா
வாஞேர்து தித்திறைஞ்சு பேரூரி டத்திலின்ப
வாழ்வாய்மி கச்சிறந்த பெருமாளே.

(உ)

தனதன தானுனதந்த — தனதாஞ.

கருமுகில் போலேயிருண்ட குழன்மட வார்மாலடைந்து
கதிவழி நாடாதுழன்று கெடுவார்தோய்
கணமதி லேயானடைந்தொர் பயனறி யாதேதமொன்றல்
கருதலே பாராமுகங்கொ டுறல்சால்போ

வருணையி னீள்கோபுரங்கொள் சுகவடி வாஞர்வமிஞ்ச
வருள்புரி மாபோதவின்ப முறுமாறே
யவிர்வடி வேலொடுதண்ட மிலகவெ னேராகிநின்று
னழகிய பாதாரவிந்த முடிசூடாய்

வெருளிமை யோர்தேரவன்று திருநெடு மாலோதுமின்ப
விமரிச மேன்மேல்விரிந்த குமரேசா
விரிகட லாலாலமுண்ட சிவபெரு மானீடுமங்கி
விழிவிழி தேசார்புலிங்க மெனவேய்வாய்

மருள்வடி வேநானெனும்பொ யுலகியன் மாலோவியன்பின்
மலரடி யுடாகவந்த குருநாதா
மடிவுறு நாள்காதினம்பன் மறையெழு வாயாகுமின்ப
மறைபுகல் பேரூரமர்ந்த பெருமாளே.
(ரு)

தனதானன தானனதானன — தனதானு.

பொருளேபெரி தாமெனநேடிந லறமாதிய சீர்நினையாதழி
புவிமீதுழல் வார்புகல்வாசக மதியாதே
புனைமேகலை யாரிடைமேவிய மதவேளலர் வாளிகளான்மயல்
புணர்தீவினை கூடிவிவேகமு ழியாதே
யருளேவடி வாகுமுன்வேலினை யிடையீடற நாடிடுதீவிர
மமைதூயத போதனர்வாரிச மலரேநே
ரடியூடமை தூளியெனீண்முடி மிசைசூடியொ ராகமுறுநல
மடியேனுறு மாறருளோர்தின மெதுதானோ
சுருளோதிகொள் வாரணமாதுள மிகவாடிட வேடர்கண்மாதடி
தொழுதோகைகொ டாடியபேரரு ளுடையானே
சுகநீடிய பாவுரமீதணி யருணாசல நாதனையோவறு
சுகமாம்வடி வோடுபுயாசல முறவாள்வாய்
தெருளேதுமி லாதுலகூடுழல் சிறியேனையு மாகவுமாரர்கள்
செறிவூடமை வானருள்கூரிய குருவாவாய்
தெளிதேனுமிழ் தாமரையோடைக ளெறிகூன்வளை யான்
[மதிபோலொளி
திகழ்பேரையில் வாழ்குமராசுரர் பெருமாளே.
(ச)

தனனதன தானனதந்த — தனதான.

தமனியமகாமேருவென்ற தனமகளிர் மீதாவல்கொண்டு
சலனமிகை யால்வாடிநொந்து தொலையாதே
சகுணவழி பாடனமென்று கதறியுட னூடேகிடந்து
தளர்கொடியர் தாமோதுபுன்சொன் மதியாதே
யமரர்முனி வோர்மேல்விதந்து புகழூன்வடி வேயாகிநின்றி
வகிலமிசை தோய்வோர்களின்ப முறுமாறே
யபரிமித மாராடல்கண்டு மகவெனவி னோர்தாய்தனங்கொ
ளமுதநுக ராவீடிணங்க வருடாராய்
குமரகுரு நாதாகடம்பு மதுபமுரல் கூதாளமன்றல்
குலவுபுய பாராநடங்கொண் மயில்வீரா
குகுகுகுகு கூகூகுவென்று சிறையடிகொ டேகூவுகின்ற
கொடிகொள்குக வேளேமெயன்பர் துணையாவாய்
மமதையிணை தீர்பேரகந்தை கொடுபுவியின் மாய்வேனுமின்ப
மருவுகதி தோய்வான்விளங்கு குருநாதா
வனசமிசை வாழ்வேதனெண்கை புகலிலருண் மேலோர்விளம்பு
மகிமைபொலி பேரூரமர்ந்த பெருமாளே.
(ரு)

தனனதனதத்ததன தனனதனதத்ததன
தானதனத்தனன தானதனத்தனன — தனதான.

மதுகரமி கத்துழனி புரிகடிம லர்க்குழல்கொண்
மானார் மையிட்டுமிக மானேர்ம ருட்சிபெறு
மதர்விழிக ளைத்திலக மிலகுமொளி பெற்றினிய
வாரீச நற்றுணரை யாலோனை யொத்தநகை
வதனமத னைப்பவள வதரவணி யைக்கருதி
மாலாய ழற்கொண்மெழு கேபோல மிக்குருகி மதியேபோய்

மழைமுகிலி னைப்பொழிய வதிதரும டுக்கனிகொள்
வானீடு முப்பரிகை மீதாத ரத்தவர்கள்
வெறிகொள்கல வித்துயரை யிணையில்சுக முற்றபர
மேல்வீடெ னப்பகரு மாயாவி னைக்கொடியர்
மனிதவுரு வொத்துறலி னினமெனநி னைத்துநிதம்
வாளாவ லைத்திடுமெ னிள்பாழ்வி திக்கொடுமை தவிராதோ

சதுர்மறைகொ ளொப்பின்முடி நிகர்மகிமை பெற்றனது
தாள்வாரி சத்தின்மண மாருவ ளப்பநிறை
வரைமுடிதொ றுற்றமரர் துயரகல வச்சுதன்முன்
வாயாலு ரைத்தபுக ழோர்கோடி யைக்கடல்கொள்
சலதரமெ னப்பெய்துறு மிரவுபக லற்றநிலை
சான்ஞான வற்புதவை போகார்க விக்குளுற விடுமாறே

தவளநிற வத்திதவ நிறைதரவ ளர்த்தமகள்
சாரேன விற்பறவை தோயாத ளித்துலவு
குறமகளின் மத்தியினின் முகிலெதிரி னட்டமிடு
கோலாக லச்சிகியின் மீதேயென் முற்கடிது
தரிசனம ளித்துவிதி விதியழிய வுச்சிமிசை
தாள்சூடி டக்கருணை நீர்தோயு னுட்கருத லெதுநாளே

பதுமனரி யுக்கிரமொ டளவில்பக லெய்ப்பிலது
பாதாள முற்றிலும்விண் மீதாயு மெட்டரிய
வடிமுடிப டைத்தவர்த மிணையிலுயர் பத்தனுறு
மாயாச முற்றொழிகு வான்வீணை கைக்கொடியல்
பளுவமைபெ ருத்தசுமை விறகுவிலை செப்பியிசை
பாடாத ரத்தினிய சாதாரி யர்க்கருள்செய் குமரேசா

பரவைதரு புத்தமிழ்த மனையதமி ழைக்கொடொரு
பாவோது நற்குமக ளாமேவி யுட்கனிவொ

டறுமதிவ ரைக்குமவ னதுபினவி முத்தநக
ராறுவு வப்பினுறு காமாரி சத்திசிவை
பரைகவுரி யத்தியுரி யவருளமு ருக்குமுதிர்
பாகாமொ ழிப்பரையு ளானுவு வப்படையு முருகோனே

விதுவுறவ ளித்தவிரு தயவரிகை பற்றுமிடல்
வீருழி யைத்தனகன் மார்பூ டணித்தகையி
லணிபவனே யொப்பில்பல கொடுமைபுரி வெற்பையவ
னுதார மிக்கதுணே யானுரை யட்டவொளி
விரவயில்பொ றுத்தபுய மிசைமழையெ னக்கவிபெய்
மேலான தத்தையொடு காலாயு தக்கொடியு மணிவோனே

விரிமலர்வி ருக்கவின மரசவன மொப்பிலுயர்
வேதாவு ருத்திரனன் மாலாமு மைக்கடவு
ளுருவெனமி சைக்கவிகை முறையின்வளர் வுற்றலர்பெய்
தோவாம துக்கொடபி டேகாத ரத்தொழில்செய்
வியனெடிசை பறவையின மிகுதுதிமு ழக்கிநிகழ்
வேதாக மத்துறைகொள் பேரூ ரிடத்தில்வளர் பெருமாளே.
(௬)

தானத்தனனத் — தன தான.

சீராட்டின்மயக் கேயேற்றிமயற்
சேருழ்த்துநரிச் சையினாலே
தீராக்கவலைக் காளாய்க்கடையிற்
றீவாய்த்திமிரத் துழலாதே
பாராட்டுபுலப் போராட்டொழியப்
பாராட்டியுனைத் தொழுமாறே
பார்காத்தருளப் பாவேற்றுநினைப்
பாய்நீக்கலடைக் கலம்யானே

யாராட்டறுவர்க் கோவாக்களிமுற்
றுருக்கைகொளற் புதவாழ்வே
யாளாய்க்கனிவிற் றுள்போற்றுநர்கட்
காணுச்சுகமிக் கருள்வோனே
பேராட்டளவற் றேகாட்டியருட்
பீடேற்றுபுகழ்ப் படிவேதோய்
பேராக்கருணைப் பேராக்கதிருப்
பேரூர்க்குமரப் பெருமாளே. (எ)

தய்யபத்தா ஞனதந்தன — தனதானு.

எவ்வப்பா ழாணவந்தரு மையற்கா ராழிமுங்கியொ
ரெள்ளைப்போ லேனுநன்றென லறியாரா
*யெல்லைக்கா ஞதகண்பெறு புள்ளைப்போல் வார்கணந்தனி
லெய்திப்போ ராடிநொந்தக மெலியாதே
செவ்வைச்சீர் வேததந்திர மெய்வித்தா நீடுன்மங்கள
செல்வப்பா தாரவிந்தமெய் தினர்தாமோர்
தெய்வக்கோ லாலவின்பமெ னுள்ளிற்பே ராதுறும்படி
செய்யக்கூர் வேல்கொடென்கண்முன் வருவாயே
கௌவைக்கார் கோளிலன்றொரு $சுள்ளிப்பே ரார்மரம்புரை
கள்ளச்சூர் மாவுரம்பகிர் வடிவேலா
கள்வற்று நீபமொன்றிய சையத்தோண் மீதிலன்பிசை
கல்விச்சீர் தோய்சுகஞ்சுக முறவாள்வாய்
பவ்வத்தா லாலமுன்கொணர் மெய்யற்பா ரூரரின்பதி
பையச்சார் வாமுனங்கணர் சிவையோடே
பள்ளுக்கார் மேனிகொண்டுசெய் நெல்வித்தோ ராடல்கண்டவிர்
பள்ளிப்பே ரூரமர்ந்தருள் பெருமாளே.
(அ)

---

* எல்—சூரியன். $ சுள்ளி—மாமரம்.

தனத்தனத் தந்ததானத் — தனதாரு.

கலக்குபொய்ப் பந்தபாசத் திருட்பெருக் குந்துமாயக்
கருச்சடத் தொந்தநீடிப் புவிமீதே
கடற்புனற் கொண்டமாலிற் றடித்தெனக் கண்டவாழ்வெக்
களிப்பருட் டங்கிவீணிற் சுழலாதே
துலக்கமிக் கொன்றுன்மேன்மைத் திருப்புகழ்ப் பண்பினேதித்
துதிக்குமெய்த் தொண்டரேவற் பணிதானே
சுகப்பெருக் கஞ்செய்சீலத் தவச்சிறப் பென்றுபேணித்
துணைப்பதத் தின்கண்மேவப் பெறுவேனே
அலக்கணுட் பொங்குகீரற் குவப்புறச் செங்கைவேல்விட்
டடற்குறட் கொன்றசோதிக் குமரேசா
வழற்கிரிக் கண்கொணுதற் ககத்தியற் கெண்கண்வேதற்
கரற்குரைக் குஞ்சொலோதற் புதவாழ்வே
திலத்துளத் தன்பிலேனைக் கடைக்கணித் தின்பஞானச்
சிறப்பருட் டங்கவாள்சற் குருநாதா
செனிப்பிறப் பென்கைதீர்நற் புளிப்பனைக் கொன்சொள்பேரைத்
திருத்தலக் கந்தநாதப் பெருமாளே.
(கூ)

தானத்தனந்தன தானனதானன — தனதாரு.

பாகச்செழுந்தமி ழாலுனைநாடொறு
நீள்பத்திகொண்டிடை யீடிலதேகவி
பாடிப்பணிந்திடு காதல்கொள்வேனெனை யிழிவேதோய்
பாழ்பட்டவஞ்சக வாணவமோகன
மாயைக்குணைந்தழி வாருடனேதமொல்
பாரிற்சுழன்றிட நீவிடுவாயெனி லினியாரே

சோகத்திறங்கெடு மாறருளானனி
யாளத்தகுந்துணை யாவரெனோர்நிலை
சோதித்திருந்தனை யேலடியேனுய்வ துளதேயோ
தூலக்கொடுஞ்சுமை தீர்தருபேருண்
ஞானப்பெருஞ்சுக பூரணவாரிதி
தோயப்புரிந்தருள் வாய்ததியீதுள முணராதோ
மோகக்கெடுங்குண நீடுமிராவணன்
மாளச்சரந்தொடு பேரடன்மேவுகொண்
மூவொத்தசுந்தர மேனியிராகவன் மருகோனே
மூகச்சமண்கொடி யார்மதுராபுரி
மீதிற்செய்வஞ்சக மாயையெலாமற
மோசித்திணங்கிய மாறனையாளருண் மறையோனே
வேகப்புலன்களி லோடுபுபார்மிசை
வீணிற்சுழன்றயர் வேனைவிடாதிசை
மேன்மைத்தவம்பொலி வார்கணமீதமை குருநாதா
வீதிக்கணின்புகு லாநடராசன்மெ
டாடற்பொலிந்திடும் வாழ்வமைசீர்திகழ்
மேலைச்சிதம்பர வாலயமேவிய பெருமாளே.
(கO)

தின்னுதனத்தனத் தனத்ததத்தன — தனதானு.

மகராலயத்திரைக் கணத்தினைப்பரு
கிடுகோரவுக்கிரச் சொலிப்புமிக்கவிர்
வடவானலத்தினைத் தணிக்குமுச்சித வடலேதோய்
மலயாசலத்தினிற் செனிப்புயிர்ப்பினை
யழலேயெனச்சொலப் படுத்துதுற்குண
மடவார்மயக்கமுட் கதித்தவத்தினி லுழலாதே

சிகராலயத்திரட் களிற்கொடித்திரு
நடமாடுமற்புதக் கழற்பதத்துணே
சிறிதோவறக்கருத் திருத்துபத்தர்கள் பதமூடே
திகழ்தூளியுச்சியிற் களிப்பொடிட்டிருண்
மகமாயைபற்றறக் கழித்துவப்புறு
திருநாளெனக்குறக் கடைக்கணித்தருள் புரிவாயே
புகராணேவத்திரத் தனேக்குறக்கொடி
யணியார்தனத்திளேப் பளித்திடத்துதி
புரிவேலமெய்த்தவத் தருட்டமைத்தொளி ரிருதாளா
புயலாரிடித்தொனிக் குமிக்கருக்குட
மெனவேயருட்சுவைத் திருப்புகழ்க்கவி
புகல்வார்களிச்சைமுற் றுறக்கொடுத்தருள் குமரேசா
பிகராகமுட்புறக் கனித்திரட்பெறு
சுவைநாணுமற்புதச் சுகப்பெருக்கியல்
பிரவாகமுற்றசொற் கிளத்துமொப்பறு குருநாதா
பிறிதோரகட்டினிற் பிறப்புறற்கய
னெழுதாவுயிர்க்குலத் தினுக்குவைப்பிசை
பிறவாநெறித்திருப் பதிக்கணுற்றவிர் பெருமாளே.
(கக)

தானதந்தன தானன தானன — தனதான.

தூயநின்பத வார்சமேகதி யாயணேந்தமெ ஞானநுபூதியர்
தோய்பெருஞ்சுக மீவாய்கொலோவல துலகூடே
தோடமிஞ்சிய மாபாவிநீயென வேமுனிந்திடு வாயோவெனுமிகு
சோகமொன்றடி நாயேனெனிடுள மருடீர்வான்
நேயநெஞ்சக மீதேயுமாபதி சீர்பெறுந்துதி தானேதுமான்மக
னீடுநன்கன வூடேகியோதிய மொழிதானே

நேரவிங்கடி யேனுடுநீபக ராதிருந்திடல் சால்போவுஞதரு
ணீதியென்பதி தேயோபராபர முதல்வோனே
மாயவிந்தைபல் வாறேசெய்சூர்தவ மான்மியம்புவி சேணுடரோதுபு
வாழவன்பொடு போராடுசேவக முருகோனே
வானணைந்திடு கானீடுசோலைக ளூடுபொங்கிய தேனுறுபோல்வழி
வாயகுன்றுக டோரூடுசேவடி யுடையானே
ஆபனந்தரு ளேதோய்தயாவொரு மேனிகொண்டுல
கூடேகுலாவியெ
ஞகுலங்தெறு சீபாதபோதக குருநாதா
ஆவினன்குடி போலாடனீடிய மேன்மைதங்கிய
[பேரூரின்மேன்முக
வாலயந்தனில் வாழ்வானவானவர் பெருமாளே.
(கஉ)

முருகக்கடவுள் திருப்புகழ்ப் பதிகம் முற்றிற்று.

நூற்பயன் வெண்பா.

காரூர் பொழிலிற் கலாபமயி லாடுதிருப்
பேரூர்க் குகனருட்சீர் பேணுமியற் — சீரூர்
திருப்புகழ்ப்பாப் பன்னிரண்டுஞ் செப்புநர்க்கு விண்சார்
பொருப்புலவு தாளே புகல்.

குமரகுருபரக்கடவுள் துணை.

குருபாதமே கதி.

உ

சிவமயம்.

நடராஜர் பதிகம்.

காப்பு வெண்பா.

பேரூர் நடராஜப் பெம்மா னுவப்பொடணி
சீரூர் துதிப்பதிகஞ் செப்புதற்கு—நாரூர்
மனப்பிரகா சத்தன்பர் வாரிசப்பூ மானும்
வனப்பிரசத் தாட்டுகள்கா வல்.

எண்சீர் விருத்தங்கள்.

திங்களணிச் செஞ்சடையு முக்கண்ணுந் தவளத்
திருநீறு மலிபவளத் திருமேனிப் பொலிவும்
மங்களப்பே ரருண்முறுவற் செவ்வாயுங் கரமும்
வாரிசத்தாட் டுணைமலரும் வயங்கவணி குலவும்
பைங்களபக் குரும்பைமுலைப் பார்வதிவா மத்திற்
பரிவினமைந் துறவிடபப் பரிமிசைவந் தருள்வாய்
நங்கணவா நிறைகாஞ்சி நதிவளஞ்சால் பேரூர்
நயந்தவெள்ளி மன்றிலிசை நடராஜ மணியே. (க)

பித்தியலு முலகியலிற் பெற்றவர்தம் மைந்தர்
பெற்றியினின் மொழிசெயல்கள் பேசியுணர்த் திடல்போல்
சத்திகளாய் நிலைதோறும் விளங்கிமுயக் குவித்துச்
சத்தனெனப் புரிந்துவினைத் தடைகளறப் போக்கிச்
சித்திகளா யவிர்ந்தவர்பாற் கூட்டியின்ப ஞான
சித்தனெனச் செய்துமருட் செயல்களறுத் தப்பால்
நத்தியணை வித்துமலங் கெடுத்தருளப் பேரூர்
நயந்தவெள்ளி மன்றிலிசை நடராஜ மணியே. (௨)

காலவனுங் கோமுனியும் பட்டிமுனி வனுமுன்
கண்டுபர மானந்தக் கடலினிடை மூழ்குஞ்
சீலவநு பூதிநிலை பெற்றமையப் புரிநின்
றிருநடநான் கண்டுவக்கச் செய்வதெந்நாள் செப்பாய்
சாலவநு கூலமிசைத் துயிர்களைக்காத் திடவுட்
டழைத்த*வநு சூதவுருச் சமைந்துறுந்தற் பரனே
ஞாலவநு பவத்தினர்க்குங் கதியருளப் பேரூர்
நயந்தவெள்ளி மன்றிலிசை நடராஜ மணியே. (௩)

அனகமறை முதற்கலைக ளளந்துதளர்ந் தறியா
வகண்டபரி பூரணநீ யாகினுமன் படியார்
மனநிலைத்த பத்திமைகண் டெளிதருளுங் கருணை
வள்ளலெனும் பெரியோர்சொல் வாய்மையையா னுணரக்
கனவிலொரு காலளித்த காட்சிகன்ம மாயைக்
கருவிகர ணங்களெலாங் கரைத்திருள்போ யொழிய
நனவிலொரு காற்காண நல்கிடுவாய் பேரூர்
நயந்தவெள்ளி மன்றிலிசை நடராஜ மணியே. (௪)

---

*அநுசூதம்—நீங்காது கூடியிருத்தல்.

அவகாம வல்லினிடை தலைகால்கா ணுதே
யங்கணையா ருடற்போகத் தழுத்தும்வினை யறமெய்த்
தவகாம வல்லியற்சீர் தாங்கிநின்றே னுனது
தரிசனங்கண் டானந்த சாகரத்தின் மூழ்கச்
சிவகாம வல்லியருண் ஞானநு பூதிச்
சிறப்பமையக் கடைக்கணருள் செலுத்திடுதல் வேண்டும்
நவகாம வல்லிபடர் தருவிலுயர் பேரூர்
நயந்தவெள்ளி மன்றிலிசை நடராஜ மணியே. (ரு)

வானாகி வளியாகி யனலாகி நீராய்
மண்ணாகி யுயிராகி மதியாகிக் கதிராய்
மானாகி மோகினியாய் விந்துவுடன் கலையாய்
வன்னமிசை பதமாகி மந்திரமாய் வினைதோ
யூனாகி யுடலாகி யுலகாகிப் பொறியா
யுணர்வாகி யிருளாகி யொளியாகிப் பிறவாய்
நானாகி நின்றநிலை யுணர்த்திடுவாய் பேரூர்
நயந்தவெள்ளி மன்றிலிசை நடராஜ மணியே. (சா)

பூட்டியவைம் புலம்பொதிபொய்க் கூட்டியல்வன் சிறையுட்
புழுங்கிடுமென் னுளங்களிப்பப் பொங்குமிசை மதுரப்
பாட்டியல்சேர் திருநாவ லூர்க்கோமா னன்பிற்
பார்த்துவந்து திருத்தில்லைப் பதிமறையோர் தேர
வீட்டியலப் புரியுநல நாட்டியநாட் டியச்சீர்
விதந்துளத்தற் புதந்திகழ விரிகாஞ்சிக் கொங்கு
நாட்டியன்மா தவிர்வதனத் திலகமெனும் பேரூர்
நயந்தவெள்ளி மன்றிலிசை நடராஜ மணியே. (எ)

விள்ளிருக்கு முடிகளெலா முரைத்திடுஞ்சொல் லற்று
விம்மியடங் கிடுமெள்ன வெளிவருமேல் வெளியா

வெள்ளிருக்கு மிடமுழுது மேற்றமைநெய் போல
வியல்பரிபூ ரணவருட்பே ரிறையேபொய் மாயைச்
சள்ளிருக்கு மனக்கொடியே னுள்ளிருக்கு முயிர்க்குட்
சாருயிராய் நின்றிடுநின் றயையறிவேன் கொல்லோ
நள்ளிருக்குந் திருவருட்கண் ணல்கிடுவாய் பேரூர்
நயந்தவெள்ளி மன்றிலிசை நடராஜ மணியே. (அ)

வானறிய வெட்டாத முடியினைப்பா தலத்தின்
வரம்பறியா வரம்பொலிதாள் வாரிசத்தை யயன்மால்
தானறியத் துவக்கியெண்ணி லாண்டறிந்தாண் டறிந்த
தானமன்றி யறியாமற் றளர்ந்தயர்ந்தா ரென்னில்
தேனறிய மலர்க்கூந்தற் சிவகாம வல்லிச்
செல்விகடைக் கண்ணோக்கத் திருவருளா லன்றி
நானறிய மாட்டுவனோ வுளமிரங்காய் பேரூர்
நயந்தவெள்ளி மன்றிலிசை நடராஜ மணியே. (௯)

புலங்காணப் புரிந்தவற்றுட் பொருந்தியழி புவன
போகவகை களைக்காணப் புகுத்தவைதோய் துன்பக்
குலங்காணப் புரிந்தவற்றைக் கடக்கும்வழி காணக்
கூட்டாத மனமாயைக் கோரணிக்கூத் தறுமெய்ப்
பலங்காணப் புரிந்ததவப் பெரியருளங் கவர்ந்தப்
பாலமைக்குந் திருநடனப் பரசுகவா னந்த
நலங்காணப் புரிதரவுண் ணுடிடுவாய் பேரூர்
நயந்தவெள்ளி மன்றிலிசை நடராஜ மணியே. (௧0)

நடராஜர் பதிகம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

ஸ்ரீமந் நாராயணாய நம:

நாராயணமூர்த்தி பதிகம்.

காப்பு வெண்பா.

பாரா யணமறைமெய்ப் பத்தரினம் வாழ்பேரூர்
நாரா யணன்றுதிப்பா நானிசைப்பக்—கூராய
சக்கரமுஞ் சங்குமணித் தார்க்கியனுந் தங்கியென்னுண்
மிக்கவின்ப மெய்தநல்கு மே.

எண்சீராசிரிய விருத்தங்கள்.

ஒளிகுலவு மரகதப்பொற் கிரியனைய வடிவு
மோங்கணிப்பீ தாம்பரந்தோ யுந்திமலர்ப் பொலிவுங்
களிகுலவு மொப்பின்மந்த காசமலர் வாயுங்
கருணைமழை பொழிநயனக் கமலமலர்த் துணையும்
அளிகுலவுந் துளவணிபொன் னடியிணையுந் துலங்க
வம்மையர்கண் மத்தியிற்புள் ளரசிவர்ந்து தோன்றி
வெளிகுலவுந் திருக்காட்சி யளித்தருள்வாய் பேரூர்
விளங்கரிநா ராயணப்பேர் மேயபெரு மாளே. (க)

அண்டமெல்லா முண்டதிரு வாயுடையா யெளிதி
லளந்ததிரு வடியுடையா யலகில்புவ னத்துங்

கொண்டவுயிர்த் திரள்களெலா மியற்றும்வினை முழுதுங்
கூர்ந்துணர்ந்து கணந்தோறுங் குறைவிலதங் கவைக
ளுண்டமையக் கூட்டிவைப்பாய்க் கேழைமையேன் றுயர
முணர்த்திடல்பா னுவின்முன்விளக் குயர்த்திடலொப்
வெண்டரங்கக் கடலனைய வளங்குலவும் பேரூர் [பன்றோ
விளங்கரிநா ராயணப்பேர் மேயபெரு மாளே. (௨)

கண்ணறிவு மூக்கறிவு புறமாந்தோ லறிவு
காதறிவு நாக்கறிவு கலந்ததனிற் பிரியப்
பெண்ணறிவோ டாணறிவாம் வேற்றுமைசெய் மாயைப்
பேயறிவை யகற்றியென் னுட் பிரியாதோங் குன்றாள்
எண்ணறிவை யீந்தருளி யங்கதனுள் ளொன்றி
யான்றானென் றிடும்பேத மில்லையென விழுங்கும்
விண்ணறிவீந் தெனையாள வேண்டுமணிப் பேரூர்
விளங்கரிநா ராயணப்பேர் மேயபெரு மாளே. (௩)

பண்ணுகன்மத் துற்பவமாங் காயமிது மாயப்
பகற்கனவீங் கிதிலேதோர் பயனெனமெய்ப் பத்தி
நண்ணுமறி வினருரைத்தல் கேட்டுமவ ருன்னை
நாடியதாற் பெறும்பயனை ஞாலமிசை கண்டும்
புண்ணுறவே படுத்துமன மாயைபுரி சாலம்
பொருந்தியயர்ந் தின்றுநின்றாள் புகலெனவந் தடைந்தேன்
விண்ணுமண்ணு மிசையருட்சீ ரீந்தருள்வாய் பேரூர்
விளங்கரிநா ராயணப்பேர் மேயபெரு மாளே. (௪)

கலைகொடுத்த விளக்கமதைக் கொண்டுனருட் பெருஞ்சீர்
கண்டவன்போ லேமாந்துட் களிப்பமைந்தே துன்ப
மலைகொடுத்த மனப்பகையை யுறவெனக்கொண் டாடி
வாழ்த்தியவத் துழன்றிடுந்துன் மதியேற்கின் போங்கு

நிலைகொடுத்த லுன்பரமே யுனக்கபய மானேன்
 நீகைவிடா தாண்டருள்வாய் நிகழ்தருதற் போத
விலைகொடுத்தார்க் கியுமணி முகிலுருவா பேரூர்
 விளங்கரிநா ராயணப்பேர் மேயபெரு மாளே. (ரு)

கனவிலுறும் பொருள்களிசை நனவினிலெய் தார்போற்
 கரியெனவென் னுயிரிசையுன் விரியருட்பைஞ் சோதி
யனகவியற் பெருஞ்சேவை கருவிகர ணங்க
 ளறவிழுங்கிச் சுடர்விடும்பே ரன்பமையா தந்தோ
கனகமுதற் சொல்வாஞ்சைக் கடலுண்மூழ் குவித்துக்
 கள்ளவினைப் பேயாட்டக் கலங்கடியேன் முறைகள்
வினவியுள மிரங்கியருள் விளக்கநல்காய் பேரூர்
 விளங்கரிநா ராயணப்பேர் மேயபெரு மாளே. (சா)

மையுலவுங் கூர்விழிதோய் மங்கையரைப் பொன்னை
 மண்ணைமதித் திட்டிவைத்து மயங்கிமடி வார்க்காம்
பொய்யுலக வாழ்க்கையினி லெனையமிழ்த்தி மாயை
 புரிந்தசெய லிதுவரைக்கும் போதுமினி மேலே
கையுலவுங் கனிபோலுன் றிருவருட்சீ ரீந்து
 கரையில்பர மானந்தக் காட்சியளித் தென்றும்
மெய்யுலவு தொண்டரிசை கதிதருவாய் பேரூர்
 விளங்கரிநா ராயணப்பேர் மேயபெரு மாளே. (எ)

பத்தர்பலர் தம்மைமுன்னு ளாண்டவரிச் சித்த
 படியாடல் புரிந்தவருட் பண்பினையிந் நாளி
லித்தரையிற் காட்டாம லிருந்தனையுட் கருணை
 யிளைப்படைந்து சோர்ந்ததுவோ வென்னேபொய் மாயை

மெத்தவிறு மாந்துளதே யிதற்குனருட் டுணையை
விட்டசையும் விறலுளதோ விரியருளாட் டியற்ற
மெய்த்தவர்கள் கிடைத்திலரோ விளம்பிடுவாய் பேரூர்
விளங்கரிநா ராயணப்பேர் மேயபெரு மாளே. (அ)

பொன்னளவுந் திருக்குருகூ ரிடைமருவுங் கவினர்
புளிமருவுஞ் சடகோபன் புலங்களெலாம் விழுங்கிப்
பன்னளவற் றமைந்தபரி பூரணவா னந்தப்
பண்புடைய பரமபதம் பாவியென வெறுத்தோ
வென்னளவி லெள்ளளவுந் தோன்றுதே மறைந்த
தியற்கையின்பத் தினுக்குமறை செயற்கையிட முளதோ
மின்னளவுங் கார்மேனி வித்தகனே பேரூர்
விளங்கரிநா ராயணப்பேர் மேயபெரு மாளே. (கூ)

குணந்தோறுங் கலந்தசட தத்துவங்க டோறுங்
கூடியுறு முலகிடைபேய்க் குரங்காமென் மனந்தான்
கணந்தோறுங் கலத்திடுநல் வினையாற்றீ வினையாற்
களிப்படைந்துஞ் சலிப்படைந்துங் காலமொழித் தேனுன்
மணந்தோய்பே ரருட்புரண வைகுந்த மாகும்
வாரிசத்தாட் குடிகொள்பெரு வாழ்வையெந்நா ளளிப்பாய்
விணந்தோய்மா மணிமாட கூடமிசை பேரூர்
விளங்கரிநா ராயணப்பேர் மேயபெரு மாளே. (கo)

மாயனென்று மாதவனென் றுந்திருப்பேர் வாய்ந்து
மறக்கருணை யறக்கருணை வழங்குதயைக் காசை
வீயனைய திருமேனி கொண்டுதிருப் பேரூர்
விளங்கரிநா ராயணப்பேர் மேயபெரு மாளைச்

*சேயனென்றெய்க் காதவன்மெய்ச் சேயனென்று வாழுஞ்
சிறப்பமைக்கும் வண்ணமணிச் சிரவைவரு பாலன்
றூயனென்று துதித்துவக்கும் பாப்புகன்றேத் தெடுக்குந்
தக்கவர்க ளிகபரசா தனம்பெறும்வல் லாரே. (கக)

நாராயணமூர்த்தி பதிகம் முற்றிற்று.

ஆழ்வார் துணை.

உ

தேவி சகாயம்.

ஸ்ரீ பச்சைநாயகி துதி.

சந்தக் கவி.

தானதன தத்த தானனத்—தனதான.

சீலமறை மிக்கநாடியப் பாலனென வெய்த்துளோயுமெய்த்
தேவரிசை பட்டிநாயகப் பெருமானார்
தேடியுளி ருத்திநாடுபொற் போவியவி ளக்கஞானமெய்த்
தீபமென வுற்றகாரணப் படிவோடே
பாலரின்ம தித்துவாரிசத் தாள்கருது பத்தியாளரைப்
பாலனமி யற்றுனீடருட் டகைதானே
பாடிமகி ழத்தயாவிழித் தாயவருள் கொட்டிநாயுளப்
பாலமைய நத்தெனுவலிட் டருள்வாயே
சாலவமிழ் தொத்தபாடலிற் பேணுநய மிக்கவூரன்முற்
சார்பொழுதி லிச்சைநாயகற் கிசைவாய்நீள்
சாலிவயல் புக்கநீண்மலர்ப் பாதமிசை வுற்றபேரருட்
சாகரவ ருட்பாபரப் பெருவாழ்வே

---

*சேயன்—தூரத்துள்ளவன்.

காலவனெல் பட்டிகோமுனித் தூயர்வழி பட்டுநாடகக்
காதனிறை யற்புதாகரத் திசைபேரூர்
காமர்நிறை யொப்பில்கோயிலிற் கூடியருள் பச்சைநாயகிக்
காரணவ ருட்சுகோ தயப் பெரியாளே.

உ
சிவமயம்.

அரசம்பலவாணர் பதிகம்.

வெண்பா.

பாரூ ரரசம் பலந்தோய் திருப்பேரூ
ரேரூர் தருங்கால வேச்சுரன்மெய்ச் — சீரூர்
துதிப்பதிக நல்கத் துணையா மவன்ருட்
கதிப்பதியா கும்பங் கயம்,

எண்சீர் விருத்தங்கள்.

*பரசுகந்த திருக்கைகளும் பதுமமலர் முகமும்
பவளவரை நிகர்வடிவும் பாதமலர்த் துணையும்
விரசுகந்த வகிலாண்ட நாயகிதோ யிடமும்
விளங்கிடவந் தருள்கருணை விமலனிடம் வினவி
லரசுகந்த வம்பலத்தி லாடல்புரிந் துயிர்கட்
கானமுத்தி வாழ்வருளு மாரணமா கமஞ்சால்
சிரசுகந்த விசைப்பிறவா நெறிநலஞ்சான் மேலச்
சிதம்பரமென் றோங்குமணித் திருப்பேரை யூரே. (க)

பிறப்பிசையா ருயிர்க்கெல்லாம் பொதுத்தந்தை யாகும்
பிரமனியற் றருந்தவமெய்ப் பெரும்பயனென் றுதித்த
சிறப்பிசையுங் காலவமா முனிக்கருள்பே ரின்பச்
சிவபெருமா னெம்பெருமான் சேருமிடம் வினவில்
துறப்பிசைமா தவப்பெரியோர் செங்கமலப் பாதத்
துணையணையுந் துகண்மணந்து தோய்குநர்க்கு முத்தித்
திறப்பிசையு நலங்கூட்டு மகிமைமலி மேலச்
சிதம்பரமென் றோங்குமணித் திருப்பேரை யூரே. (உ)

வஞ்சமக மாயைவலைப் பட்டயரு மான்ம
வகைமுழுதும் பெருங்கருணைத் தகைவிழியா னோக்கி
யஞ்சலிரென் றுண்டருள்சாந் நித்தியமிக் கமையு
மகிலாண்ட நாயகிதோ யமலனிடம் வினவில்
மஞ்சணைபூஞ் சோலைமிசை யஞ்சுகமே ழிசையார்
மறைகொள்சுகத் துறையமைய வானவருள் ளிறைவன்
செஞ்சரணப் பத்திபெறத் தேக்குபுகழ் மேலச்
சிதம்பரமென் றோங்குமணித் திருப்பேரை யூரே. (ங)

---

* பரசு—மழு, தோத்திரம்.

மாலவனும் பிரமனுமுன் கோமுனிபட் டிமுனி
வடிவுடன்பே ரேற்றிசைந்து மாதவச்சீ ரோங்குங்
காலவனோ டுற்றுளமெய் கனிந்துகரைந் தேத்தக்
காமர்நடக் காட்சியருள் கடவுளிடம் வினவில்
ஞாலவறு போகமிசை தூலமுறு கன்ம
நரர்களுக்குஞ் சுரர்வியக்கு ஞானசுகா னந்தச்
சீலவறு பூதிநிலை மேலமைக்கு மேலச்
சிதம்பரமென் றோங்குமணித் திருப்பேரை யூரே. (௪)

கொங்களவும் பூங்கோதை யெங்களம்மை தவமெய்க்
கோலம்விழி கொடுநோக்கிச் சாலவுமுள் வியந்து
பங்களவு மணக்காட்சி யாவருங்கண் டேத்தப்
பரிந்தருளாற் புரிந்தருளெம் பரமனிடம் வினவில்
மங்களமிக் கமைதடத்தி லாடுமட மாதர்
வதனம்விழி களுமலரும் வண்டுமையங் காட்டிச்
செங்களப மீண்டுமுடற் பாற்கலக்கு மேலச்
சிதம்பரமென் றோங்குமணித் திருப்பேரை யூரே. (௫)

வம்பிசையு மலைமகண்மெய்த் தனத்தினுடன் கரஞ்சால்
வளைத்தழும்புங் கொண்டதென வானவரான் கன்றின்
கொம்பிசையுஞ் சுவட்டுடன்காற் குளப்படியுங் கொண்ட
கோலமுடி பெற்றவருட் குழகனிடம் வினவில்
கம்பிசையுங் கந்தரத்தா ராடவர்பே ரின்பக்
கடன்மூழ்கி வெங்காமக் கனலொழிக்கு மகிமைத்
தொம்பிசையு மெய்ப்பிறவா நெறியிசைவார் மேலச்
சிதம்பரமென் றோங்குமணித் திருப்பேரை யூரே. (௬)

மருந்திசைபே ரின்பநறுந் தமிழ்கொடுதோத் திரித்து
வணங்கடியார் தம்மிருகண் வாயகத்தி லூட்டும்
விருந்திசைமெய் யகிலாண்ட நாயகிதன் வலப்பான்
மிளிர்கால வேச்சுரப்பேர் விமலனிடம் வினவில்
அருந்திசைவிண் புகும்புகழ்நா ரதன்மகதி வீணை
யமைதருதந் திரிகண்மணந் தழுந்திலய மாகித்
திருந்திசையிற் பொருந்திசைசான் மகிமைமலி மேலச்
சிதம்பரமெங் ஞேங்குமணித் திருப்பேரை யூரே. (௭)

சீரூருந் திருநாவ லூராளி நயந்தோய்
செய்யுண்மணந் திசையடிகள் செய்யுண்மணந் திசைய
நாரூரு மம்மைமர கதத்துடன்போய் நாற்று
நட்டவனுட் பேரின்ப நட்டவனூர் வினவில்
காரூரு மணிமாட மீதிலுலாக் காட்சி
கண்டமட வார்கண்மனங் கொண்டருள மகிமைத்
தேரூரும் வீதிநறும் புகைவிணிசை மேலச்
சிதம்பரமென் ஞேங்குமணித் திருப்பேரை யூரே. (அ)

கந்தனையு மொற்றையுற்ற தந்தனையு மளித்தெங்
கட்டமொழித் தகத்துவகைக் கடலளித்திங் கியற்றும்
வந்தனையேற் றகிலாண்ட நாயகியோ டமையும்
மாணரசம் பலவாண வரதனிடம் வினவில்
சந்தனமு மகிற்குறடும் பணியுமணித் திரளுந்
தமனியமுந் திரைக்கரத்தாற் றடங்கரையி லொதுக்குஞ்
சிந்தனைய வணிக்காஞ்சி நதிவலஞ்சான் மேலச்
சிதம்பரமென் ஞேங்குமணித் திருப்பேரை யூரே. (௯)

கருத்தமையுஞ் சிவயோகக் கௌசிகனுட் கங்கைக்
காசிநக ரத்தினடக் காட்சியளித் தன்பின்
பொருத்தமிகத் தவம்புரியப் புரிந்துவர மீந்த
புண்ணியன்செஞ் சடைகொள்பிறைக் கண்ணியனூர்
உருத்தரித்த சுரர்நரர்நீ ரெம்மையொப்பீ ரென்ன [வினவில்
வுபதேச மாற்றுமியற் சுபதேசப் பொலிவார்
திருத்தருக்க ளூதிப்பிறப்பற் றம்மைமகிமை மேலைச்
சிதம்பரமென் றோங்குமணித் திருப்பேரை யூரே. (௧௦)

பரவைவிழிப் பரவைகொண்க னிசைநயமா துரியப்
பாக்கியமிக் கேற்றதிருப் பாட்டிசைப்பார்க் கிருமை
வரவைபவ நலமுழுதுந் தேக்குகரு ணைக்கண்
வரதனர சம்பலந்தோய் பரதனிடம் வினவில்
அரவையெருக் கினைநகுவெண் டலையுடன்கொக் கிறகை
யமரர்களென் பினைத்தோலை யணிகலனுக் கொளலிற்
சிரவையுறு சிற்றடியேன் பாப்புனைவான் மேலைச்
சிதம்பரமென் றோங்குமணித் திருப்பேரை யூரே. (௧௧)

சந்தக்கவி.

தன தந்தன தான தானன — தன தானா.

பயனென்றுமி லாதுமாயைசெய்
திடுதுன்பவி நோதவாழ்விடை
படிகின்றபொய் வீணரோடுற வமையாதே
படியின்புடை தோயுமானிட
செனனந்தரு நீழன்மேவினர்
பணிதங்குல கோர்களாவல்செய் திடுசீர்சால்

வியனொன்றிய தாமிதாலித
மகிதந்தொட ரர்துதோயிரு
வினையுஞ்சம மாகியேமல வகைதேய்வான்
விரியின்பருண் மேவலேபுரி
செயலென்றவ ரோதும்வாய்மையின்
விதிகொண்டுனே யேபராவிட வருள்கூர்வாய்

நயனொன்றிப போதனுரருள்
சுதனன்பொட நேகநாள்புரி
நலமிஞ்சிய பூசையேகொடுண் மகிழ்வாய்நீண்
நயனங்கள ருமலேபொழி
புனன்முங்கபி டேகமாடுபு
நடனந்தெரி வார்மெஞானவுள் விழியீவாய்

அயனொன்றொரு காலுமேழையென்
முடியிங்கெழு தாதவாறினி
தருண்மங்கள மீயுமாறெதிர் குருவாவாய்
அணிதங்கிய பேரையூரினி
லிசைமிஞ்சிய காலவேசுர
வரசம்பல வாணனேசிவ பெருமானே.

அரசம்பலவாணர் பதிகம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

தேவிசகாயம்.

ஸ்ரீ அகிலாண்டநாயகி பதிகம்.

கட்டளைக் கலித்துறை.

புகிலாண்டமையர சம்பலக்கோயிலைப் போலெனது
திகிலாண்டநெஞ்சினும் வாழத்திருவுளஞ் செய்கருணை
யகிலாண்டநாயகி தோத்திரப்பாட லறையவவண்
முகிலாண்ட சோதித் திருமேனியென்விழி முன்னிற்குமே.

எழுசீர் விருத்தங்கள்.

பொங்குபுன்முறுவ லரும்பருள்வாயும் பொலிதுணைவிழி களுங் காமர், தங்குவாண்முகமுஞ் சதுர்க்கரங்களுமின் றழைத்தவிட்டிடையிசை ஞானக், கொங்குறுகலசத் துணை களும்பதமுங் குடிகொடென் மனத்திடங் கொண்ட, வெங்கு ணங்குடிவாங் கிடச்செய்வாய்பேரூர் வேண்டகிலாண்ட நாயகியே. (௧)

துதித்திடன்மறந்து மாயைவல்வினையிற் சுழன்றயர்வேற் குணின் வடிவம், பதித்திடம்பொலியப் பதித்தவான்கருணைப் பரப்பினுக்கெல்லையின் றுணர்ந்தேன், நிதித்திறமறுமை நிலையுயிர்க்கிடச்சாந் நித்தியவடிவமைந் தயன்கை, விதித்திற மொழிப்பக் கதித்திறப்பேரூர் வேண்டகி லாண்டநாயகியே.

அகத்துலகாசைப் பேய்பிடித்தாட்ட வமைந்தவாக் கிசைநிரா சையினர், சகத்துறவொழித்துட் சுகத்துடையார்ச் சார்பெருவாழ்வளித் தருள்வாய், நகத்துறவுற்ற காவலனுவ னற்றவச்சுதையுரு வாந்தெய், விகத்தனிச்சுடரே யணித்திருப் பேரூர் வேண்டகி லாண்டநாயகியே. (௩)

அருந்தவக்கால வற்கருண்மகிமை யமைபணிக்கால வேச்சுரனே, டிருந்தவக்காட்சி யென்னிருகாட்சி யெய்து மாறருள்கைநிற் கரிதோ, மருந்தணிக்குதலை ஞானவானந்த வாக்கியமாகுமா துரிய, விருந்தளித்தன்பர்க் கருள்செயப் பேரூர் வேண்டகி லாண்டநாயகியே. (௪)

பெற்றிடுமுயிர்த்தாய் நின்றனத்துறுபால் பெட்டிடல் விட்டிகப் பாசப், பற்றிடுமனப்பால் குடித்தயரெனைக்கண் பார்த்திலாய்போன்றுறன் முறையோ, முற்றிடுமன்பா லரகர மகுட முழக்கிடுவார்க்குறத் தன்னை, விற்றிடுமகிமை யுற்றிடும் பேரூர் வேண்டகி லாண்டநாயகியே. (௫)

மையுறழ்விழியார் யாவருமுன்மெய் வடிவினங்கிசமென வென்னுள், ஐயுறவறவோர்ந் துய்யுமாறருள்வீ றமைகடாட் சத்தினேக் கிடுவாய், பொய்யுறவமையு மிதுவரையென்னப் புகன்றுதன்புகலமை வார்க்குண், மெய்யுறவமையப் புகுதிருப் பேரூர் வேண்டகி லாண்டநாயகியே. (௬)

நலம்பொலி தருமம் பலத்திரட்கெல்லா நாயகமாத்திக மூரசம், பலம்பொலிகோயிற் கொண்டநீயெனக்குட் பலம் பொலிந்திடப்பரிந் தருளாய், சிலம்பொலிப்பாதத் துணை யெனக்காஞ்சித் திருநதிப் பாற்பொன்மாமணிதோய், விலம் பொலிக் காட்சி வளத்திருப்பேரூர் வேண்டகி லாண்டநாய கியே. (எ)

மண்படுமாய வுடலபிமான மருவுபுமாடைபெண் ணென் னப், புண்படுமென்னெஞ் சினுக்கிடுமருந்துன் பொன்னடி யன்றியொன் றுளதோ, எண்படுபோகத் திச்சைமுற்றகற்றி யினிப்பிறவாதருண் ஞான, விண்படுபதியா மதிநலப்பேரூர் வேண்டகி லாண்டநாயகியே. (அ)

பண்ணிலாவியற்செந் தமிழ்கொடுன்புகழ்ச்சீர் பலபடப் பாடியுள் ளன்பான், மண்ணிலாருயிர்கட் கிடரொழித்தின்பம் வழங்குமெய்வாழ்வளித் தருள்வாய், எண்ணிலாநலங்கண் டோர்க்கிடுந்தூல விலிங்கமாஞ்சிகரியுண் மையுற, வெண் ணிலாமுடிகொண் டிசைதிருப்பேரூர் வேண்டகிலாண்ட நாயகியே. (கூ)

தன்னைநேர்கருணை யன்னைநின்ஞான சந்நிதிப்பாலெடுத் துணர்த்த, லென்னையானென்னை யீந்தனனுன்னை யீந்திடத் திருவுள மிசைவாய், முன்னைவல்வினைதீர் திருநடக்காட்சி முதிர்தவத்துறையின்மூழ் கினர்க்கு, மின்னைநேரொளிமெய் பெறவருள்பேரூர் வேண்டகி லாண்டநாயகியே. (க0)

பண்ணிசைக்கொங்கு நாட்டிடையுயிர்கள் பண்ணிய புண்ணியப் படிவாய், விண்ணிசைசுரரு மேத்தணிப்பேரூர் வேண்டகி லாண்டநா யகியை, நண்ணிசைச்சிரவை பொலி

கவுமாரர் நாடிராமானந்த குருதா, ளெண்ணிசைக்கந்த சாமி
யேத்திடுபா விசைப்பவர்க்குறுஞ்சுக வினமே. (கக)

ஸ்ரீ அகிலாண்டநாயகி பதிகம் முற்றிற்று.

சந்தக் கவி.

தன தாந்த தானனத்—தன தானா.

கடுவாய்ந்த நாகமொத் திசைநிங்கு தோய்சினக்
கனன்மீந்த வீணருட் குமையாதே
கவணேந்து மோர்சிலைத் தகைபோன்று பாழுடற்
களின்மாந்து போகமுட் பதியாதே
சடுவோங்குமா தவத் திடைதேங்கு பூரணத்
தகைவான்ப ராபரத் துறுமாறே
தளர்வேன்றன் மாமுடிப் புடைதாங்க வாரிசச்
சரணூன்றநீயுளத் தருள்கூராய்
கெடுவீம்ப ஞல்வளர்த் திடுதீங்கி லாதிமக்
கிரிவேந்த ஞேகைமெய்ச் சுதையாவாய்
கிளர்வேன்ற பாடல்சொற் றுறியூர்ந்து ளாணையக்
கினிபாய்ந்தி டாதெடுத் தருள்வாழ்வே
அடுதீங்கு தோய்புலப் பகைநீங்கு மாறுளத்
தடிவேண்டு மாதவத் திறலீவாய்
அணியார்ந்த பேரையிற் பொலிமாண்கொ ளாலயத்
தகிலாண்ட நாயகிப் பெரியாளே.

வாழி விருத்தம்.

பெருமைமலிந் தோங்குதிருப் பேரூர் வாழி
பிறங்கரசம் பலவாணப் பெம்மான் வாழி
யருமையருட் டிருவுருவாய்ந் தகலா தோங்கு
மகிலாண்ட நாயகியெம் மன்னை வாழி
யிருமைநலந் தோயடியா ரினங்கள் வாழி
யிசைகோயின் மணிநீறஞ் செழுத்தும் வாழி
கருமைமுகில் மறையவரான் கணங்கள் வாழி
காவலர்பா வலர்நலங்கள் கதித்து வாழி.

தேவி சகாயம்.

கும்பாபிடேக கால விளக்க வாழ்த்துக்கவி.

பதிறைடியாசிரிய விருத்தம்.

திருமிக்க காலவத் தவமுனிவர் பிரதிட்டை
செய்துபூ சனையியற்றிச்
சித்தாந்த மாவாக்கி யோபதே சங்கொண்டு
திருமருவு கோமுனிமறைத்
திசைமுகப் பட்டிமுனி யொடுசீல வழிபாடு
செய்தவப் பாக்கியத்தாற்
திகழரசி னடிவெள்ளி யம்பலக் கூத்திசை
திருக்காட்சி கண்டுயிருடல்

ஒருமிக்கவானந்த மயமாகும் வானந்த
வுருவான பேரூரினீ

டொளிகுலவு மகிலாண்ட நாயகிச மேதமுற்
றுயர்கால வேச்சுரப்பே
ரோங்குதிரு வரசவம் பலவாணர் தமதுதிரு
வுள்ளவருள் வெள்ளமேற்போங்
துலகுயிர்க ளிகபரசு கங்குலவி யற்சத்தி
யோபந்த னங்கும்பநீர்

மருமிக்க வபிடேக முந்தன் கரத்திலிசை
வளர்புண்ணி யப்பொருளினுன்
மறையோர்கள் புரிவேள்வி யாகுதிப் புகையுமிசை
மந்திரத் தொலியுநால்வர்
மணிவாய்மெய் மறைதிருப் புகழ்நாத மிமையோர்கள்
வான்புலத் தமைவிருந்தாம்
வகைசெய்கோ வைக்கந்த சாமியருள் சேய்சுப்ர
மணியனிசை தருமகருத்தர்

உருமிக்க மறையோர்மு தற்சொல்பல பரிசனரு
முத்தமத் தவமுனிவரும்
உற்றவிக் கிரமசித் திரைபத்தின் மதிவார
மோங்குசித் திரைபூரணத்
தொளிர்மீன லக்கினத் துமைகருணை விழிமீன
மூன்றிலக் கினமருவியே
யொப்பில்பே ரானந்த மிப்போதி லெப்போது
மொன்றிமிக வாழிமாதோ.

தெய்வமே துணை.

உ

குருவே துணை.

பேரூர்ப்புராண சாரசங்கிரகமாகிய

ஸ்ரீ பட்டிநாயக மாலை.

விநாயகர் காப்பு.

எழுசீர் விருத்தம்.

போற்றியலரசம் பலத்திருப்பேரூர்ப் புராணத்தின்சாரசங் கிரக
மேற்றியல்பட்டி நாயகமாலை யின்புறமுடியவென் னுளத்தன்
பூற்றியற்பெருக வருட்கடலாகி யுவந்துவீற்றிருந்தடி பணிவார்
வேற்றியற்பவநோய் மாற்றியற்பட்டி விநாயகன்சேவடி பணிவாம்.

நூல்.

துப்பருட்பவள வரையொடுநீலத் தொல்வரை துணைபெறக் கலந்த, தொப்பவெள் விடைமேற் றோன்றருட்காட்சி யுட்புறத் தகன்றிடா துதவாய், பப்பருணலந்தோய் நேமியங்கானப் படிவர் வேண் டிடத்தவச் சூதன், செப்பணிமகிமை, மெய்ப்பருட்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (க)

கொன்புணருமைதோ யுரத்திலென்பாரங் கொண்டிடுதிறத் திலன் புடையா, ரின்புகற்றொடையொ டென்கவிகளுமேற்

றியலருட்கடற்பெயர் புறப்பாய், நின்புகலுணர்ந்த நந்திவேட் கியம்ப நிகழ்குகனுரைதற் குணர்த்தும், தென்புகழ்ச்சீர்த்தென் கைலை யம்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (உ)

ஏலவார்குழலார் கருப்பெருங்குழிநின் றேறுமாறறிகிலேன் மாயா, சாலமோகத்தா லயர்ந்தனனருள்வாய் சத்திநிபாதன்முப் பொருடேர், காலவன்முத்தித் தலமெனச்சிவலிங் கம்பதிட்டித் தர்ச்சித் தேத்திச், சீலநின்னுபதே சம்பெறுபேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (ங)

காமமாதியதுற் குணப்பரலுறுத்துங் காயவெஞ்சுரத்தயர் வேனைத் தாமதமறநின் பதநிழற்சேர்த்தா டவத்தயனுறங்கத்தே னுவைமா லேம்மாரிமயத் தருந்தவம்புரியென் றேவமெய்ப்பயனுரு தயர்காற் சேமநாரதனுற் றேனுவோர்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (ச)

தனங்கடம்முடைய வென்றிசைத்தணைவார் தனங்கடம்மு டையவென் றீர்க்கு, மனங்கவேள்படைகட் கயர்தராதருள்வா யருள்கொணாரதனுரை வழியே, முனம்பெறுகாஞ்சி படிந்தசரீரி மொழிப்படிதேனுவா திலிங்கந், தினம்பெறப்புற்றின் மேற்பெய் பாற்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (ரு)

கன்னியரளகத் திருளினைத்தனமாங் கல்லினைக்கட்பெருங் கடலைப், புன்னிலைபெறுமென் புன்னிலைமனநிற் பொருந்தலென்ற ருள்பெருந் தவஞ்செய், நன்னிலைத்தேனுக் கன்றுகண்டாட நண் ணுபுற்றுறையுநி னிலிங்கச், சென்னியிற்கோடு குளம்புதோய் பேரூர்ச்சிட்டனே பட்டிநாயகனே. (சா)

ஊனுறுமாயை யுடற்பரந்திடற்கே யுலகமுற்றவத்துழன் றயர்வேன், வானுறுமறுமைக் கென்செய்வேனருளாய் வளர் கன்றின்செயற்கயர் தேனுத், தானுவப்புறமுன் றேற்றியீதென்னுட் சம்மதித்தேற்றதாற் காம, தேனுவின்புரம்பட் டிபுரியென்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (எ)

விடங்கொளேந்தலைய வரவுதீண்டுதல்போல் விடாதறமயக்கு மைம் புலனுன், மடங்கொள்வேன்குற்றந் திருவுளங்குறியேல் வந்தருளடைக்கல மடியேன், நடங்கொளவிழைநா ரணன்கயிலை யினீ நவின்றவாகோமுனி யாகித், திடங்கொள்பத் தியினு லணை திருப்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (அ)

நன்கயிலாய விழிமடமானுர் நகைத்திறக்கிலேகிழப் பிணமே
யென்கயிலாயத் தகுதுணையாமுன் னிருபதம்வல்லேயீந் தருண்மால்
தன்கயிலாய சிவலிங்கமமைத்துச் சக்கரதீர்த்தந்தொட் டாட்டித்
தென்கயிலாயஞ் சிறப்பிற்செய்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே.

அருவுருவுபய மென்றவிர்ந்தருளா லாட்ல்செய்நின்னியல் பறியா, தொருவுருவாதம் புரிகுநர்க்குள்ள முழன்றிடாதருள்புரி பிரமன், மருவுறுதுயில்விட் டுனைத்தொழநீவாய் மலர்ந்திடல்போற் பட்டி முனியாந், திருவுருவடைந்தெய் தியபுகழ்ப்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (கய)

வார்த்திரண் முலைப்பால் வார்த்தினியொருதாய் மகவென வளர்த்திடுந் துன்பந், தீர்த்தருள்பாரா முகஞ்செயேலபயந் திகழ் பட்டிமுனிவட கயிலை, யார்த்தியிற்புரிந்து சிவலிங்கம்பதிட்டித் தவனியுளிருத்துகுண் டிகைதோய், தீர்த்தத்தி னபிடே கித்தமை பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (கக)

இகழ்புகழெனனு மிரண்டுமென் றனைத்தொட் டீர்த்தலைக்காது மான் முன்மண், ணகழ்வினைகொண்டெட் டரியநின்செம்பொ னடியொளிக்குள்ளெனை யொளிப்பாய், நிகழ்விதிகாஞ்சி மேற்கினி லுன்கண் ணிறையருணேக்கயா கஞ்செய், திகழ்திருநீற்று மேடமைபேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (கஉ)

சந்தைநேருலகத் துன்பவாழ்க்கையினைச் சரதமென் றுான் வுளர்த் துழலு, மந்தைமந்தைகளை யுறவெனக்கருது மவிச்சையென்

ருெழிதர வருள்வாய், முந்தைமாதவக்கா லவன்பட்டிமுனிகோ முனிதிருநடந்தரிசிப்பான், சிந்தைசெய்தமைநீண் மகிமைசால் பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (கங)

சாட்சியாமுன்னே டொன்றிடக்கட்ட சாத்தியப்படுமெனக் குண்மைக், காட்சியீந்தருள்வ தென்றுகோமுனிநீ கழறுமன்றறி கிலன் கலங்க, மாட்சிமுன்மன்ற மறைத்துநீர்புதிதா வயக்கியெற் போற்றுமி னென்னச், சேட்சியா காய வாக்கருள்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (கச)

பித்தனுயுலக மாவிடைக்கவிழ்ந்த பேதையேன்றனைக்கடைக் கணித்துன், பத்தனுக்கிடனிற் கேகடன்மன்றம் பணியிடமறிகிலர் பழிச்சி, முத்தராங்கால வன்பட்டிமுனிகோ முனியுளம்வியந்து தாழ்ந் தேத்தச், சித்தனுயாடல் கோடிசெய்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (கரு)

ஒன்றினைவிட்டொன் றினைப்பிடித்திடையற் ருேடியென்ற னைத்துய ருறுத்திப், பொன்றிடப்புரியு மனப்பகையொழித்துன் புகலருண்மூவர்சித் தேச, னென்றிடின்மன்றங் காட்டெனவடகீ ழிசைதிசையரசடி நிழற்பாற், சென்றிரசதமன் றெழப்புரிபேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (கசு)

தரையொடுவிண்பா தலவுலகிசையுஞ் சடமளித்திடுகொடு வினையாற், கரையிலாத்துயர்கொண் டுழன்றதுசாலுங் கருணைசெய் மூவர்வேண் டிடலாற், புரையில்சீர்நடரா சன்சிவகாமி புரிந்திரண் டாமுகூர்த் தத்திற், றிரையுடன்வெளியென் ருெளிதரும்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (கஎ)

வருத்துமும்மலத்திற் பட்டவத்தெனதான் மாவுழன்றயர்ந்திடு திறமென், கருத்துண்மேவியநிற் கிசைப்பதென்னுறு காலமுங் காலவன் முதலோ, ரருத்தியிற்றெரிசித் திடநடராச னருட்சிவ காமியாய் விளங்கித், திருத்தியிற்பூசை யேற்றருள்பேரூர்ச் சிட் டனே பட்டிநாயகனே. (கஅ)

கரத்துணைசிரத்திற் கூப்பிநெஞ்சென்பு கரைதரக்கசிந்துகண் ணருவி, யுரத்தினிற்பாய வுனைத்துதித்திடுநா ளுண்டுகொல்பங்குனி மதியிற், றரத்திருவிழாப்பத் தாந்தினத்திரசி தச்சபையூடொலி மிகவுத், திரத்தத்தநாரீ சராநடிபேரூர்ச் சிட்டனே பட்டி நாயகனே. (கசு)

கருவிகள்கரண மோய்ந்துநின்செம்பொற் கழனிழலொன்றடி யவருண், மருவிடவருள்வாய் மூவர்பல்லியத்தின் வழங்கொலிய லதுநின் மலநின், னுருவறிகிலரேங் கிடமலமாற்றி யொப்பின் ஞானக்கணீந் தருளார், திருநடங்காணப் புரிந்தருள்பேரூர்ச் சிட் டனே பட்டிநாயகனே. (உய)

கூற்றினுக்கஞ்சிச் சரண்புகும்பனவக் குமரனைத்தென்னையு மன்பா, லேற்றிடக்கருதாய் நடனவேகத்தா லெய்த்தராப்பூணுமிழ் விடத்தாற், போற்றினோர்மயங்க வன்னரையன்ன பூரணிகரிமுகன் குகனுற், றேற்றியாதரித்த கருணையெம்பேரூர்ச் சிட்டனே பட்டி நாயகனே. (உக)

தூயநின்மலர்த்தாள் கருதளவறுசிற் சுகம்விடுத்திகத்துயர்ப் பந்தந், தோயவோடிடுமென் மனக்கொடும்பேயைச் சுட்டறத்திருத் துவாய் வஞ்சக், காயமாயத்தின் றொடக்கின்மெய்க்கதியைக் காலவன்விருப்பிலீந் தினியொர், சேயனென்றமையா தருள்புரி பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (உஉ)

பூவையங்காவை யிடமெனக்கொண்ட புலவர்கள்வியக்குநன் னலங்கள், யாவையுமருள்பட் டிமுனிகோமுனிவர்க் கிச்சையாம் வரமுவந் துதவி, மாவைகுந்தஞ்சத் தியவுலகத்து வாய்ந்துமிக் கூற்றினென் னடனச், சேவைகண்டமைமி னென்றருள்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (உங)

பத்தியில்கொடியே னுயினும்வேதம் பகர்ந்திடற்கரியநின் புகழ்ச்சீர், துத்தியம்புரியும் விருப்பினேன்கருணை சுரந்தருளித்தலத் துறைவார், நத்திநந்நடங்கண் டவர்க்கெலாமென்று நவிலறம்

பொருளின்பம் வீடுஞ், சித்தியாகுகவென் றருளியபேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (உச)

கோணியவுலக வீணினினெஞ்சங் கொட்புறுவாரைநட் புறவென் றாணியல்பூணங் கவர்பொருட்டீட்டு முணர்விலேற்கருளப சயத்தா ஞணியகாளி காணியநடன நவிற்றியம்பிகைக்குவெள் ளிவரைச் சேணியன்மன்ற நடந்தரும்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. ()

இதம்பரவையின்பா லோதியுநம்பி யின்றிருப்பாட்டணிந் தனைநின், பதம்பரவெனக்கென் னருள்கிலைகலிநின் பண்பைமாற் றடல்படைப் பதுவோ, கதம்பரவியகூ ரன்செய்துன்பமரர் கயிலை யுற்ரேருதநம் மேலைச், சிதம்பரம்புகுமென் றுரைத்தருள்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (உரு)

பொய்தழைத்திடுமா யையிற்படிந்துள்ளம் புழுங்குமென்றன் னையுன் னடிக்கீ, ழெய்தவென்றருள்வா யென்னுருவுமைமா விருக் கன்மெய்யுருக்கொள்வெற் பேத்தி, மைதவழ்முருகோ னுருவமா மருத வரையிடையமைந்துமா தவநீர், செய்திரென்றமரர்க் குரைத் தருள்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (உஎ)

ஆர்த்தவைம்புலவே டருக்கிளைத்துன்ரு ளடைக்கலமாகுமென் னவலந், தீர்த்தருள்செயலுன் கடன்காலாக்கினிருத் திரன்சடை யுற்றவிர் கங்கை, கூர்த்தவேல்வடிவா மருதவேரூடு கொப்புளித் தெழுமருண் மதுரத், தீர்த்தமான்மியச்சீர் விரித்தருள்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (உஅ)

இறப்பிலாருளத்தத் துவிதமாய்க்கலந்துண் டின்புருவாக்குநின் றிருத்தாண், மறப்பிலாதுன்னும் வரமருண்மருத வரைமிசை மகிமைமிக் கமைந்து, வறப்பிலாதோங்குங் கன்னிகைகந்த மாருதி சரவண தீர்த்தச், *சிறப்பிலேகருக்குப் புகன்றருள்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (உகூ)

---

* இலேகர்——தேவர்.

பாவபுண்ணியமாம் வினையிவைதரும்பொய்ப் பயன்மயக்கொழி யநின் கமலச், சேவடியணையுந் தவச்சிறப்பருள்வாய் சீர்த்திதோய் பஞ்சவெற் புகளு, மாவலிற்பணிந்து காஞ்சிதோய்ந்துவகை யாழி யிற்படிந்துமான் முதலாந், தேவர்போற்றிரசி தச்சபைப்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (நு0)

காம்புறழ்தோளார் கருப்பையெய்தாதுன் கழலருண்மருத மால்வரையுற், றேம்புமாதவநா ரதன்சொல்போற்புரியு மும்பரன்பு வந்துவை வேலாற், பாம்புநேரசுரர்த் தடிந்திமையோர்கள் பரவிடக் கந்ததீர்த் தத்தாற், றேம்புணர்பூசை குகன்புரிபேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (நுக)

தவமிலேனெனினு முன்னடித்தொண்டர் தாம்பொருந்தரு ணிலை யெய்து, முவகைமிக்குடையேன் வேண்டுவார்வேண்ட லுதவலுன்கடமை யேமாங்கி, யவமயற்கடல்வீழ் பாதகச்சுமதி யாக்கைகாஞ் சியிற்புண்மா விடலாற், சிவவுலகமையப் புரிந்தருள் பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (நுஉ)

இரவுடன்பகலு மிடையினுமிடையீ டின்றிநெக்குருகிநின் செம்பொற், சரணநாடிடும்வாழ் வருள்சுகுமாரி சபிக்கவானர மதாம் விதூமன், வரவுனதருளான் முசுகுந்தனுகி வான்புரந்தரம்பை யெள் ளலின்†வத், திரமுறக்காஞ்சி படிந்துதாழ்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (நுங)

சகசவாணவத்தின் பிணிப்பொழித்துன்மெய்த் தனித்த ஞா னனந்தபுரண, சுகசொரூபத்தா டமைத்தருள்பிருகின் சுதையைவேட்டவனிடுஞ் சூளா, லிகலிராக்கதனும் போகிநாரதனு விரும்புனற்காஞ்சிதோய்ந் தேத்திச், சிகரியாலயம்யா கம்புரி பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (நுச)

---

† வத்திரம்—முகம்.

ஈர்த்தெனையநித்தத் துக்கமாம்பொருட்க ணிச்சையுண்டாக்கி மிக் கலைக்குந், தூர்த்தவன்மனந்தூர்த் தருடவக்கோலச் சுவிர்த்தி வன்கொலைப்பவந் தலங்கள், பார்த்துநீங்காது நாரதனுரைத்த படி கரிகாற்சோழன் படியத், தீர்த்தநற்காஞ்சித் தீர்த்தமார்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (௫௫)

செய்வகையீதென் றறிகிலேன்மாயைத் தேகமேயானெனத் திரிந்தே, னுய்வகையெதுகந் தருவன்மேன்மாலுற் றுமைசொலான ரமக ளிர்களா, மைவளர்விழியா ரெழுவருங்கரிகால் வளவனோ டுற்றுமூழ் கிடுகாற், தெய்வமெய்தருங்காஞ் சித்திருப்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (௫௬)

விருப்புடன்வெறுப்பென் றெழுமனநினைவை வேரறக்களைந் தனைக் கருதத், திருப்புவாய்கரிகாற் சோழனுமுமைதன் சேடிய ரெழுவருந் திகழ்நின், னுருப்பதிட்டித்தர்ச் சனைசெய்காற்றோன்றி யுடன்பிறவாநெறி தரலாற், றிருப்பெயர்க்கார ணம்பெறுபேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (௫௭)

மாயவனயனிந் திரன்முதற்றேவர் வாழ்வையுந்தாழ்வெனக் கருது, நேயமெய்த்தொண்டர் பதத்துகளணிந்தென் னெஞ்சுவப் புறுதின நிகழ்த்தாய், தூயமெய்ப்பத்தி கொண்டவிர்கரிகாற் சோழன்மூழ்கிடுதலா னுமை, தேயமார்துறைதோய் காஞ்சிவாய்ப் பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (௫௮)

ஊடிடுந்தொழிலின் பெனப்புரிமடவார்க் குவப்புறலுன்னின னல்லாற், பேடிவில்லடிகொண் டருளுநின்கருணைப் பெருக்கமோர் கிலன்கயி லையின்பா, லாடியினீமுன் னழைத்திடச்சாயை யாகி வந்தருளுமா ரூரன், றேடிவந்தாடுங் காஞ்சியம்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (௫௯)

அறுவகையகமே யகப்புறம்புறத்தோ டமைபுறப்புறச்சம யங்கள், தொறுமமைந்தெவருந் தொழுங்கடவுளராத் துலங்குன் மாண்புணர்த்துதி யூரன், குறுகிடவுவப்பாய்ச் சிவையுடன்பள்ளக்

கோலமேற்றுயர்மறைச் சிரநேர், செறுவினுட்புகுந்தாட் டயர் திருப்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (சய)

அருதவாகுலத்துள் வீழ்ந்தயர்ந்துண்மை யறிவிழந்துழலு மென் றனைநீ, வெருவிலக்கிடுமா றெண்ணிடிற்றிக்கு வேறிகத்து ளதுகொல் விளம்பாய், நருவுமிழ்கடப்பந் தார்ப்புயக்குமர நாய கனைங்கரன் பள்ளச், சிருரிலூற்றுடும் பணைபொலிபேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (சக)

கருக்கடலிடையாழ்ந் துழலெனைமுத்திக் கரைபெறுங்கரை யிலின் புருத்தோய்ந், திருக்கநின்கமலத் துணைப்பதப்புணையீந் திடற்கொளுட்கரு திடுவாய், மருக்கமழ்துளவன் முதற்சுரரிதை நாற் றுதியாம்வடிவுடன் மருவத், திருக்கணநாத ரேவல்செய் பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (சஉ)

மையுறழ்மேனி மாலயன்காணு வண்ணமோங்கியவுனை யுலகப் பொய்யுளாழ்ந் திளைப்பே னென்னுணர்வதனுற் பொருந்த லுண்டோவலர் மகளிர், பையுறழல்குற் சசியிவர்பச்சைப் பள்ளி நாயகியினோ டுவந்து, செய்யுணூற்றமைக்கு மகிமைசால்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (சங)

வண்டமிழ்ந்தருந்து மதுக்கடுக்கையைநேர் வண்டமிழ் கொண்டுபோற் றிடச்செய், தண்டர்மெச்சிடுசீ ருறப்புரிநம்பி யாலயத்துனையறி கிலனீ, விண்டசொல்வழுவா நந்தியைவினவி விழிக்குறிப்பால்வய லணைந்து, தெண்டனிட்டன்பிற் போற்றருட் பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (சச)

உழுந்துகண்ணுடி நின்றருள்பொழுதுன் னுருவுளத்துன்னி நெக் குருகித் தொழுந்தவப்பெரியோர் பதத்துகளணிமெய்த் தொண்டர்தந்தொண்டனுக் கிடுவா, யழுந்துளப்பத்திச் சுந்தரனு டனீ யம்மைமாலாதியார் படியுஞ், செழுந்திருக்காஞ்சி நதியணிப் பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (சடு)

பெண்டொடுபிள்ளை சோதரருற்ருர் பெற்றவர்மற்றவர் பாசங் கொண்டொடுங் கிடுவேற் கருள்செய்நின்மொழிகட் குறிப்பினுற் பகர்நந்தி சென்னி, மண்டொடுபடையாற் றுணித்தவன்றீர்த்தம் வயக்கிப்பூசித்தலா வின்பாய்த், திண்டொடுவரநல் கியவருட் பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (சசுரு)

உருநடமாடி யனலுறமெழுகி லுளமுறுக்கிடுமெட மானுர், கரு நடமார்புன் பிறப்பிறப்பொழியக் கண்ணருள்புண்ணிய மூர்த்தீ, யருநடமார்பாப் புகலுமாரூர ரன்பிலேத்திடவெள்ளி மன்றிற், றிருநடங்காணப் புரிந்தருள்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. ()

காரகங்கார வினைத்திரண்மாயக் காயத்திலைம்புல வேடர், போரகங்காணப் பயந்தனனருள்வாய் போற்றுமாரூரர்பொன் கேட்ப, மூரல்செய்தாட லேபரிசிஃது முத்தியந்தலம்பொன்னீ கிலநஞ், சேரலன்பாற்கொ ளென்றருள்பேரூர்ச் சிட்டனே பட்டி நாயகனே. (சஅ)

வெருச்சித்தம்படைத்து நமனுரு தன்ருள் விரைமலர்கொண் டருச் சித்தே, யருச்சித்தம்பெறச்செய் கீழ்ச்சிதம்பரப்பொன் னம்பலந்தொழுநம்பி யின்பப், பெருக்குற்றவெள்ளி மன்றுகண்டு வந்து பேரூரர்பெருமானைப் புலியூர்த், திருச்சிற்றம்பலத்திற் பெற் றுமென்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (சகூ)

தொல்லைவெம்பவப்பாலையினடந்தயர்ந்து துடிக்குமென்னுருயி ரருள்வீட், டெல்லையெய்திடுநா ளிஃதெனவேனு மியம்பில்வன் றுயரகல் வேனே, வல்லைநேர்கொங்கைப் பரவைகோன்றிருவாய் மலர்ந்தமாமறைத்துதி வினவித், தில்லையந்தணர்தேர் மகிமைசால் பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (ருய)

வருணமாச்சிரமங் கடந்துதேகாபி மானமற்றவருளத் தவி ருன், றருணவாரிசத்தாண் முடிபுனைதில்லைத் தலம்விடுத்தணைந்திடு மறையோ; ரருணலம்பெறுவா னழகியதிருச்சிற் றம்பலம்புரிந்

தர்ச்சித் தேத்தித், தெருணடங்கண்டு மகிழ்திருப்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (௫௧)

கார்த்தகைக்குழற்செவ் வரிமதர்க்கண்ணார் காதல்வாளரவநன் மதியுண், டீர்த்தவத் தலைக்காத்தவப்பயன்பிறவி யெவற்றினும் யானுறப் புரிவாய், சீர்ப்பட்டீச்சுரத்தின் மூன்றுயோசனையுட் டேவர்தானவர்முனி வோர்செய், தீர்த்தநற்சிவலிங் கங்களார் பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (௫௨)

இன்னிசைமறைக ளேத்துநின்புகழ்ச்சீ ரிடையறத்துதிக் கைவைத் தெனையாள், பின்னிசைபிரமன் படைப்புறமுத்திப் பேறுறுமாறுளங் கருதி, முன்னிசையயன்மால் விண்ணவர்யோகர் முனிவர்போற்றிடநடங் காட்டுஞ், சின்னிசைவெள்ளி யங்கிரிப் பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (௫௩)

விரிதருமுலகப் பவவினைக்காட்சி விடுதியாமென்னுளந் திரும்பப், புரிதருசெயலுன் றனக்குரித்தென்னை புகல்வதிங்குளது மற் றடியேன், றெரிதருநடவே கத்தராநஞ்சஞ் சிந்துவெப்புற் றுளோர் வருந்தத், திரிபதகையைநீக் கெனவிடும்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (௫௪)

உள்ளியலொளிக்குள் ளொளியெனவகலா துறையுநின்னிறைவுளத் துன்னேன், சள்ளியற்புலன்வாய்ப் புகுந்திகத்துழன்றேன் றவறுளங்கொண்டிடே லெந்தாய், வெள்ளியங்குன்றச் செவியடியுரோம மேவுவன்னியிலுன துரைபோற், றெள்ளிமேலெழுந்த நதிபுகும்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (௫௫)

பித்தியலுலகப் பொய்நடைப்பட்டுப் பிணக்குறுகுணத்தர்க ணட்புள், வித்தியோவாது துயர்க்கணீர்பாய்ச்சி விளைக்குமென் களைப்பொழித் தருள்வாய், புத்தியற்கங்கை நீர்படிந்தயின்று புணர்ந்துளார்சோகமற் றிட்ட, சித்தியெய்திடத்தந் தருளணிப் பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (௫௬)

நவநிதித்திருவுண் மூழ்குசீர்தன்பா னண்ணிமூழ்குநர்க்கெளி தாக்குந், தவநதியமுத வுந்தியாதிகங்கை தட்சிணகங்கைஞா னதோயை, நிவகலிகன்ம நாசினிபிறவா நெறிபிப்பிலம்பிர யாகை, சிவநதிவிருத்த காஞ்சிவாய்ப்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. ()

ஈண்டியவிறப்பும் பிறப்புநீக்கிடுதற் கித்தலமன்றியின் றென் னத், தூண்டியநிற்கியான் செய்கைமாறுன்னைத் துதித்தலற்றறி கிலன் றீரத், தாண்டிருந்தபமா தியபுரிவார்க்கொன் றனந்தமாப் பெருக்கிநன் முத்தி, தீண்டினோர்க்கருளுங் காஞ்சியம்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (ருஅ)

வார்த்திகம்போக மாற்றலைபோக மாற்றெனவந்துமே டணைக, ளார்த்திகத்தலைக்க மெலிந்தனனருளா யன்பின்மண்டலம்படிந் தயில்வோ, ரார்த்தியீந்தலகை பிணிமலடுகண்முற் றறுத்திறுதி யிற்பிர மபதஞ், சேர்த்திடுபிரம தீர்த்தமார்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (ருகூ)

நித்தமும்படிந்தின் புறவயின்றவர்க்கு நேர்வினைப்பகைபற நீக்கி, யுத்தமப்பயனல் குகாலவதீர்த்த மொளிர்கதிரிந்திரன் றீர்த் தம், நத்தருட்கந்த தீர்த்தங்கும்பேச னகத்தின்கீழ்க்குறுமுனி தீர்த்தஞ், சித்ததீர்த்தம்யோ கிதீர்த்தநற்பேரூர்ச் சிட்டனே பட்டி நாயகனே. (சூ0)

மறந்தருங்கொடுவல் வினையினரேனும் வாய்பெயக்கணத்தவ ராவி, யிறந்திடப்புரிந்து பின்பிறவாவீட் டிசைப்பதாய்த்தாம்பிர மாதி, நிறந்தருபொன்னுய்ச் சித்தர்கள்புரியு நின்மலத்தன்மையுற் றோங்குந், திறம்பொலிநச்சுப் பொய்கையார்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (சூக)

அங்கமார்தாக சோகமற்றிடுமா றருந்தினோராடினோர்க் கருளு, மங்களவசிட்டம் பார்க்கவம்வாம தேவம்பொன்கேத்திர பால, மங்கிநந்தீச மேமமேகாளி யமைகுலசேகரம் பாலஞ் சிங்கஞ்சக்கரந் தூர்க் கைதீர்த்தமன்பேரூர்ச் சிட்டனேபட்டிநாயகனே. (சூஉ)

தசையுடற்றுவக்காம் பரிசமாத்திரத்தாற் சாருயிர்க்கிகபரத் தின்ப, மிசைதல்செய்சண்டே சுரஞ்சத்தகன்னி யிந்துவேபிரமத கணமே, நசைகொளங்கிரமே சோழமியக்க நாரதமுசுகுந்தந்தேனு, திசைகொள்கன் னிகைதீர்த்தம்பொலிபேரூர்ச் சிட்டனே பட்டி நாயகனே. (கூங)

நின்மயமாகுந் தன்மையாற்சித்தி நிறைதருதருக்குலங் கொடிகள், கொன்மணியிரச மணிக்கூபங்குகைநாற் கோட்டிபமாங் கிச பேதி, பொன்மயச்சோதித் தாருபாற்கிணறு பொருவில்சர்க் கரைநதி யுஞ்சேர், சின்மயவெள்ளி யங்கிரிப்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (கூச)

இந்தான பளிங்கு வரைசிலாநதியொ டிருங்குகைபாரத சர சிற், கொந்தானகோடி தூண்பொலிகனகக் குளிர்மன்றிலங்கரன் செவ்வேள், நந்தானகரனு தியர்திரண்டேத்த நனியதிரைங்கரு வியொலி, சிந்தானமுத்தர் செவிபுகும்பேரூர்ச் சிட்டனே பட்டி நாயகனே. (கூரு)

வானுளார்வியக்குஞ் சந்தனச்செறிவில் வாய்த்தவைந்தேழ் தலைநாகந், தானுஞ்சந்தான கரணிமுன்னௌட தங்களும்வெள்ளி வெற் பினிலா, மானுமால்வெற்பிற் றீர்த்தமுமயன்றன் வரையி னிற்சிலாநதி மருதிற், றேனுவந்துலவு மகிமைதோய்பேரூர்ச் சிட் டனே பட்டிநாயகனே. (கூசா)

உத்தேசமான பயனெலாங்கணத்தி லுதவிமுத்தியுந்தருந் தகை சான், மெய்த்தேச மிதையல் லாதிலையெனுமெய் விளக்கிறவாப்பனை யுடனோர், பொய்த்தேசமான வீங்குறப்பிறவாப் புளியாதிலிங்கருக் கருகே, சித்தேசமரங்காஞ் சியுமவிர்பேரூர்ச் சிட்டனே பட்டி நாயகனே. (கூஎ)

பொன்றிடப்புரியு மைம்புலப்புழையுட் புக்கவென்மனத்தை யுன் ருளி, லொன்றிடப்புரியாய் விசுவநாதரினே ருற்றரிபரமெனும்

வியாசன், கன்றிடநந்தி யோதியசாபங் கழிதரமுன்னெழுந் தருளிச், சென்றிடென்றருள வவனணைபேரூர்ச் சிட்டனே பட்டி நாயகனே. (சுஅ)

ஒப்பிடற்கரிய நின்னருட்சுகமிக் குலவுறுதிருக்கவு மாயை, வெப்பிடத்தெனையாழ்த் தலைப்பதென்னுரையாய் வியாசனற்காஞ் சியிற் படிந்து, திப்பியவெள்ளிக் கிரிதொழுதன்பிற் றிருந்துபூசனை செயக் கையுஞ், செப்பிடத்துதிரா வுந்தரும்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (சுகூ)

காலனுக்கினைசெல் லாதமான்மியஞ்சால் காசியேதலங்களுக் கெல்லா, மேலதென்விசுவா மித்திரன்யோகில் வெள்ளிமன்றுணர்த் திவை ரவன்றன், சூலதண்டஞ்செய் திடும்பதியீதித் துன்பமுமற்ற வின் பருளுஞ் சீலமேவியதென் றிசையருட்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (எ0)

சரத்தியன்மைக்கண் மாதர்யாவரையுந் தாயெனக்கருதிமா தவஞ்செய், விரத்தியீந்தருளீண் டமைதவவிசுவா மித்திரன்வேண் டுமா றருளாற், பரத்திசைவீடல் லாதறம்பொருளின் பமுந்தருதுந் தலங் குருகேத், திரத்திருப்பேரும் பெறுகவென்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (எக)

சுட்டிலாப்பரிபூ ரணவருண்மெய்ச்சிற் சுகவநுபவம்பெறு முத்த, ருட்டிகழ்நிலையென் னுளம்பெறப்பதிப்பா யோங்கொருகற் பத்திற் பிரமன், மட்டிலாத்தலந்தீர்த் தங்களைப்படைத்துண் மமதை யுற்றுறவுனதான, சிட்டியோவென்ற சரீரிசொல்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (எஉ)

பொத்தியமாய வுடலபிமானம் போக்கிநின்றுணைத்திருத் தாளிற், சத்தியபத்தி யருள்விதிகலை சார்ந்தனன்வினவநீ படைக் கும், புத்தியெய்தாமுன் படைத்துநானடித்தேன் பொருந்துமென் னுருவெள்ளிக்கிரிகாஞ், சித்திருநதியே கங்கையென்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (எங)

புத்தியன்மதுர புஞ்சவான்றமிழாற் பொருந்துநின்றிருந்திசை களையே, துத்தியம்புரியப் பணித்தருள்கவலை தோய்திரிசங்குக்காஞ் சொர்க்க, மத்தியிற்படைத்தந் தணமுனியாகும் வரம்விசுவற்கிடுந் தவமெய்ச், சித்திமாபுரமா விளங்கணிப்பேரூர்ச் சிட்டனே பட்டி நாயகனே. (எச)

கரியகண்டமுமுக் கண்ணுநின்பவளக் கவினுருவுந்தினங் கண் டுள், விரியகண்டத்துட் குடிபெறப்புரிவாய் மேலையாஞ்சிதம்பரம் பத்தி, புரிககனபுரி பரம்புரம்போத புரம்வன்மீகபுரஞா னபுரம், தெரியுகாட்டியப்பு ரித்திருப்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. ()

வானவர்தமக்கு மெய்தரிதுன்முள் வணங்குமானிடப்பிறப் பென் னுங், கானமாமறைச்சொல் விளக்கிடுஞான காரணச்சிற்சபைகுந்த, கானமாதிபுரி மேருநகரங்கல் யாணபுரம்போதிக் கானம், தேனுநற் பிரம புரத்திருப்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (எசு)

கருக்கடல்புகுத்தா தெனைப்புரப்பதுநின் கருணைக்கொர்பெரி தன்றங் கிரனும், பெருக்கமார்பஞ்ச பாதகன்காஞ்சி பெறும்புனல ருந்துகாற் பாம்பால், வெருக்கொளமடிந்தாற் றினுந்திருநீற்று மேட்டினுய்நரியிடு திறத்தாற், றிருக்கயிலையிற்புக் கமைதல்செய் பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (எஎ)

உலுத்தரைப்பாடும் புலவரிற்பயனற் றுடலினையோம்பியிங் கவமே, யலுத்தவெற்கருளா யந்தகனூர்பா ழாதல்கண்டீண்டமைந் துன்மெய்க், கொலுத்தரிசித்துக் குறைசொல்காலிங்கு குறுகினே ரன்றிமற் றவர்பாற், செலுத்துநின்னரசென் றருள்புரிபேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (எஅ)

எய்தவன்றனைவிட் டம்பைநோகுநர்போ லென்விதிவெறுக் கிலன் பிறரை, வைதவம்பெருக்கு மதியினேனுய்யும் வகையருண ரதன் மொழியான், மைதவழிமய நீத்துமையரனை வல்லையின்மணந்

திட நோன்பு, செய்தமைதவசித் தித்திருப்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (எகூ)

சங்கையில்பாவ சலதியையருளாற் சார்தருங்காஞ்சியி னிடையோ, ரங்கைநீரொழித்த லால்வடவைவையென வறையலாம் போலுமந் தணனுய், மங்கையாமுமைபா லடைந்துசல்லாப மாற்றம்விண்டுவந்துருக் காட்டிச், செங்கைதொட்டந்தப் புரத் தணைபேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (அய)

கொப்பத்துள்வீழ்குஞ் சரமனையேற்குங் கொடுத்திநீகாணு மண் டபத்தின், முப்பத்துமுக்கோ டிதேவர்மால்பிரமன் முனிவர் நாற்பத்தெண்ணு யிரவ, ரொப்பத்தங்குவித்த பிரமதகணங்க ளூற் றுளோர்யாருநா ரதன்மேய்ச், செப்பத்தருணஞ்சேர் சிறப்பினைப் பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (அக)

பாவியைதரநிற் கணிந்துபோற்றெனைநீ பாவியென்றோதினு மன்பா, ஞவியையுபதே சத்துளமமைத்து நாடுவேனிமையவேந் தில்லாண், மேவியைதினிற்பால் கொடுபதம்விளக்கி மேற்றெளித் துள்ளருந் தியுமா, தேவியைத்தத்தஞ் செய்திடும்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (அஉ)

நவையுறுமுடலந் துக்கமாரிகந்தோய் நரகனைத்தென்றுணர்ந் தாலுஞ், சுவையுறப்போகங் காட்டுமாணவத்தின் றொடக்கறுத் தருடிரு மணங்காண், குவையினர்க்கிருமைப் பயன்களுமருளாற் கொடுத்தபின்விடுத்திய வின்பச், சிவையுடன்பொருந்தி விளங்கு சீர்ப்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (அங)

பொய்வகையுலக வீண்வழக்கென்னிற் பொங்குமிக்குவகையிங் குனைத்தோய், மெய்வகைச்செலவென் றூற்கலங்குளத்தேன் வீட்டு றற்கென்கடவேனே, கைவரும்வீணைக் கடவுண்மாமுனிவன் கரை தல்போற்கந்தனை மணப்பான், றெய்வகுஞ்சரிசார் தவம்பொலி பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (அச)

பொங்கமாமறையா கமமுடிப்பொருளென் புந்தியூடுறவருள் கந்தன், றுங்கமார்தெய்வப் பிடிகளித்திடநேர் தோன்றுகாலிந்திரற் கூவி, மங்களமணமண் டபஞ்செய்வித்தெவரும் வணங்கியேத் திடவருள் வழங்கிச், சிங்கவான்றவிசி லமர்ந்தருள்பேரூர்ச் சிட் டனே பட்டிநாயகனே. (அரு)

குருவடிவாவந் தருளினைதேருக் குறைவுறுங்கொடியனேற் கின்ப, மருவடியவர்கொள் பூரணானந்த வாழ்வெநாள்வழங்குவை பஞ்ச, தருவடிக்கோமான் சசியுடன்மணப்பந் தரிற்பசும்பாலினன் முருகன், றிருவடியலம்பச் சென்றுபாய்பேரூர்ச் சிட்டனே பட்டி நாயகனே. (அசா)

ஐவகையுணர்வி லடங்கிடாதவற்றை யணுவெனத்தன்னுளே யடக்கு, மெய்வகையுணர்வீந் தருடெய்வப்பிடியை மேகவாகனன் றத்தஞ் செய்யக், கைவயிற்கொண்டு பொன்சடங்கியற்றக் கழலம் மியமைத்தனல் வலமாய்த், தெய்வமங்கலஞ்செவ் வேள்புனை பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (அஎ)

கற்றிலேன்கற்றோர் மொழிப்பெரும்பயனைக் கருதிலேன்கதி பெறு மிச்சை, சற்றிலேன்மாயைச் சார்பறவருண்மெய்ச் சார்பு தந்தருடயா நிதியே, வெற்றிவேற்குகன்குஞ் சரியுடன்கண்டோர் விழிபெறும்பயன்பெற வுலாவார், தெற்றிவான்மணிமா டத்திருப் பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (அஅ)

வாயிரங்கிடுதன் சேயினைத்தேற்ற மதித்திடாவன்மைமிக் குற்ற, தாயிலையேலுன் னருட்கிசைத்திடலென் றவங்குசத்துசன்சுர ராண்டோ, ராயிரமியற்ற நேர்ந்திருபெண்க ளளித்தனமருதவெற் படைந்து. சேயினைத்தொழிற்சேய் தருமெனும்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (அகூ)

அருந்தலும்பொருந்த லும்பெறும்பேறென் றலைதராதருணிலை காட்டாய், மருந்தினலறத்தாற் குறைதலில்குட்டம் வளர்குல சேகரன் றலங்கள், பொருந்தலிற்சமமா யிசையுநாள்வீணைப் புங்க

வன்மொழிவழி யுள்ளந், திருந்திநற்காஞ்சி படிந்துறும்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (கூ0)

மருப்பணிக்கொங்கை மங்கையர்காம வாரியைவன்கழை வில்லார், சுருப்பணிநாணி யுடையவனுணச் சுடுங்கனற்கண்கொடு தொலைப்பாய்,*திருப்பணிக்காய நலம்பெறவின்பஞ் சேர்குலசேகரன் வதிந்து, திருப்பணிபுரிந்து போற்றுசீர்ப்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (கூக)

பூவினைக்குற்ற மறப்புரத்தன்மினுர்ப் பொருந்தல்கள்ளருந் தன்மன் னவனு, மேவினைக்குற்ற செயலென்காபாலர் விதிமதம் புகுந்திரி லோகக், கோவினைக்குற்றத் தருதுநாரதன்கைக் குண்டிகைநீரின்மா லொழித்துன், றீவினைக்குற்ற மருந்தெனும்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (கூஉ)

மருட்பெருக்குறுமைம் புலக்கொடும்பிறவி வழியடைத்தலில்பே ரின்ப, வருட்பெருக் குறவெற்கருள்பவருனையற் ருருளர் திரிலோக சோழ, னிருட்பெருக் கார்காபாலவன்றெடக்கற் றிருந்தவந்திருப்பணி யியற்றித், தெருட்பெருக் குறச்செய்மகிமைசால் பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (கூ௩)

சத்துவகுணமும் பொய்யுடன்மானந் தாக்குருவுணர்வுநின் றிருத்தா, ளொத்துளமகலாப் பத்தியுமடியேற் குதவுநாளென்றுரைத் தருள்வாய், புத்துருச்சிவவே டந்துழாய்வில்வம் பூசனைமுறையுமைக் குபதே, சித்துலகோர்கட் குணர்த்தருட்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (கூச)

வருபகற்கனவாய்ப் பயனறுமுலக வழக்கில்வீழ்ந்துழலுமென்னுளநின், சொருபநிச் சயத்தென் றிசைகைதான்மிகன்வித் துருல்தைமனையிராக் கதனுற், பருரலுற்றுப் பலவிதமுயன்றும் பயன்

---

*திருப்பு அணி, காயம் எனப்பிரிக்க.

பெருதயருநாள் வீணைத், திருமுனிபுகல வுணர்ந்தணைபேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (கரு)

அமிர்துறழ்மதுரச் செந்தமிழ்க்கவிக ளளவறத்தினம்பொழிந் தறுகா, விமிர்தருகடுக்கை மலரினின்புயத்தில் யானணிந்துவக்குமா றருளாய், நிமிர்திருநீற்று மேட்டுமண்காஞ்சி நீர்கொடுகுழைத்து மன் மனமெய், திமிர்தலுமரக்கற் பிரித்திடும்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (கசு)

தாங்குறுந்துலாபா ரப்பொன்வேட்டேற்ற துட்டனின்மனைவி யைத் தொட்ட, தீங்குளனெனினும் பிரமதீர்த்தங்காஞ் சித்திரு மேட்டுமண் படலா, லோங்குருத்தெய் விமானமுற்றேனென் றொருவத்தான்மிகன்வித்து ருலதை, தேங்குமின்பிருமை யும் பெறும்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (கஎ)

பரத்தமைதரவா ருயிர்களைப்பதிக்கும் பதிப்பொருளேகிரே தத்திற், றிரத்தமைவிசுவ நாதர்திரேதத் தினிற்கொளழுதலிங்கே சர்துவா, பரத்தமைதரும நாதர்சார்கலியிற் பசுங்கன்றின்குரங் கொம்புச் சுவடு, சிரத்தமைகோட்டீச் சுரனெனும்பேரூர்ச் சிட் டனே பட்டிநாயகனே. (கஅ)

மறப்பவவினைப்பட் டுன்றிருத்தாள்கண் மறப்பவைத்திடுமன மாயை, யிறப்பநின்கடைக்கண் ணோக்குசித்திரையிலேற்றசித் திரை யிலெண் ணெயிட்டுச், சிறப்பணியணிந்திட் டன்னமொடியல்பல் சிற்றுண்டிநிவேதிப்பார் தமக்குத், திறப்படுசிவபுண் ணியந்தரும் பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (கக)

இடபமாமதிப்பூ ரணைவிசாகத்தி லிரசமுக்கனிகளு மாட்டி, யடல்கொள்பான்மாங்கா யூட்டினர்க்கமல மாருலகளித்திசை நாற் காற், சுடர்விரிமணிமண் டபத்தினீர்நிறைத்துத் தோயுநின்வசந்த நல் விழாச்செய், திடமனத்தினர்க்கின் பீந்திடும்பேரூர்ச் சிட் டனே புட்டிநாயகனே. (கம)

ஆவலிலானிப் பூரணைக்கேட்டை யதில்வட்டமணிமண்ட பத்தின், மேவருகனிமுற் ருட்டியூட்டுநர்க்கு விண்ணவர்போற்றுசீ ரருளித் தாவருமுத்தி ரத்தெண்ணெய்சாத்தித் தருங்கனிவகைகளூட் டுநர்க்குத், தேவதேவர்களென் பேறருள்பேரூர்ச் சிட்டனே பட்டி நாயகனே. (கயக)

வாடிப்பூதலத்தா ருயிர்களெய்க்காது வரந்தருமரகதக் கொடியை, யாடிப்பூரத்திற் சுக்கிரவாரத் தடைந்தன்பிற்றொழுமடியவர்க்கு, நீடிப்பூ ரணமார்சுகமிகத்தெய்த நிறைவித்தீற்றினிலிமையோர்கள், தேடிப்போஞ்சத்தி யுலகருள்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (கயஉ)

கிளைத்தலைத்திடுகன் மச்சிலுகாருக் கிரத்தடல்கடக்குமெய் வலியற், றிளைத்தயர்வேனைக் காத்தருள்சிங்க மிசைந்தமூலத்திரு நாளில், வளைத்தமெய்வந்தி போலவந்தித்து மதுரப்பிட்டூட்டுநர்க் கின்பந், திளைத்தவைபோகப் போகந்தோய்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (கயங)

மன்னியவருண்மெய்த் தாயினைப்பச்சை மரகதவல்லியை யிமவான், கன்னியையென்கண் முன்னியையுமையைக் கன்னிமாமதியினி னவராத், தன்னிலன்புடனு ராதனைபுரிவோர் தருமுலகின்பெலாந் துய்த்துச், சென்னியமறுசீர் பெறவருள்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (கயச)

தவளமால்விடைமே லம்பிகையுடனோர் தரந்தரிசனந்தரிலென்னைத், துவளமால்செய்யு மாயைசொல்லாமற் றொலையுமே துலாக்கொள்பூ ரணியி, லுவகையுற்றன்ன மாட்டுநர்க்கொவ்வொன் றுக்கொருகற்பமற் புதமார், சிவவுலகின்பந் தரும்புகழ்ப் பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (கயரு)

பொய்பலவுடையேன் செய்வகையறியேன் பூவரும்பாவருமிகழ்ந்து, வைபவக்கொடியேன் வைபவம்பொருந்த வழங்குவாய்

கார்த்திகை மதியில், நெய்ப்படிவிளக்கெண் ணறவிடுவோர்க்கு நிறை யொளியுருவளித் தமரர், செய்பணிகேட்கும் பதந்தரும்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (௧௰௬)

விற்சுடர்தனுவினிற் படர்தருமதியின் மிக்கபேரன்பினில் விடியு, முற்சுபபூசை புரிந்துங்கண்ணருளின் மூழ்கவுமுதிருமா திரையில், நற்சுகவானெய் யாட்டுபுசுகந்த நனிதிமிர்ந்தாடல்காண் போர்கள், சிற்சுகத்தன்றெய் தவும்புரிபேரூர்ச் சிட்டனே பட்டி நாயகனே. (௧௰௭)

அகரமொடுகர மகரமாயதனு ளமைபொருளேயருண் மிகை யான், மகரமாதத்திற் பரிமிசைகண்டுவணங்குநர்க்கப்பதந் தந்து, நிகரறுபூசத் தாடுபூசிப்போர் நீடியசுவர்க்கமாண் டகன்று, சிகரவீ டுறநல் கியுந்திகழ்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (௧௰௮)

சம்பராரியைநீற் றியவிழிவேதன் றலைகொய்கை யந்தகற் றுக்குஞ், செம்பதாம் புயமென் னுட்பதித்தஞ்சாத் திருவருட்பேறு றச் செய்வாய், கும்பமா மதிதோய் சிவநிசிப்பூசை குயிற்றுநர்க் கெளிதிலன் னவர்தந், தெம்பமைவேட்கை யொருங்கருள்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (௧௰௯)

தாண்டவப்புலன்வாய்ப் போகமின்பென்னச் சுழல்பவர்தாமும் வந் தெய்தி, யாண்டயனந்திங் கட்பிறப்போடீ ராறின்மேற்றிதி களி லெட்டிற், பூண்டமெய்ச்சோம வாரத்திற்காஞ்சிப் புனல்படிந் தாற்றிடிற் பூசை, தீண்டருவினைதீர்த் தருள்புரிபேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (௧௧௰)

அவம்பொலிகொடும்பா தகமலாலறமொன் றறிகிலராயினு மண்பாற், றவம்பொலிதருங்கோ முனிவராதியர்க டாஞ்செய்பங் குனித்திரு விழாமெய், நவம்பொலிதரக்கண் டேத்திடினவர்க்கு ஞானவானந்தபூ ரணமாஞ், சிவம்பொலிவீடு காட்டருட்பேரூர்ச் சிட்டனே பட்டிநாயகனே. (௧௧௧)

அரசமாவனத்தில் வதிதல்போலடியே னகத்துற்றோங்குநின்
னருட்சீர், பரசவைத்திட்ட திறத்திலோதுநர்க்கும் பயன்முழு
தளித்தருட் கதிர்கா, விரசதசபையி னடனநேர்ஞான விரசமீந்
திறப்புதிப் பொழிப்பான், சிரசமைத்திருதா ளீந்தருள்பேரூர்ச்
சிட்டனே பட்டிநாயகனே. (கக௨)

ஸ்ரீ பட்டிநாயக மாலை முற்றிற்று.

தெய்வமே துணை.

வாழி விருத்தம்.

பேரூர் வாழி பட்டிலிங்கப் பெருமான் வாழி யிடப்பாகம்
பெற்ற பச்சை நாயகியெம் பிராட்டி வாழி கருணைபொழி
சீரூர் பட்டி விநாயகப்பேர்ச் செல்வன் செவ்வேற் சேய்வாழி
சீல வரசம் பலத்தாடுந் தேவன் றிருமா தவன்வாழி.
ஏரூர் மறையோ ரினம்வாழி யிசையஞ் செழுத்து நீறக்க
மேற்ற பெரியோ ரினம்வாழி யிறையான் குலம்வான் முகில்வாழி
வாரூர் தனக்கற் பின்ர்புலவோர் மறையாகமமா தியவாழி
மாறு தவிர்மங் கலங்களெலாம் வாழி வாழி வாழியவே.

திருச்சிற்றம்பலம்.

உ

குருவே துணை.

[redacted] இயற்றிய வேறு நூல்கள்.

அச்சிட்டுள்ள பகுதிகள்.

பக்தமான்மியம்	....	விலை	ரூ.	0
சங்கராசாரியர் வைபவம்	....	,,	,,	0
வண்ணத்திரட்டு	....	,,	,,	0
மருதாசலப் பிரபந்தம்	....	,,	,,	0
பக்தமான்மிய சாரம்	....	,,	,,	0
கௌசைப்புராணம் பிரபந்தம்	....	,,	,,	0
அவிநாசிப் பிரபந்தம்	....	,,	,,	0
வேற்கடவுள் மாலை சந்தம் வகுப்பு முதலியன	....	,,	,,	0
இரத்திஞசலப் பிரபந்தம்	....	,,	,,	0
ஸ்ரீ இராமானந்த சுவாமிகள் பிள்ளைத்தமிழ்	....	,,	,,	0
வெள்ளியங்கிரி சத்திநாயகர் மாலை, பதிகம், ஷை விநாயகர் பதிகம்		,,	,,	0
அன்னியூர்த் தலபுராணம், தோத்திரத்திரட்டு	....	,,	,,	0
திருப்பேரூர் தோத்திரப் பிரபந்தத்திரட்டு	....	,,	,,	0
பேரூர் பச்சைநாயகி பிள்ளைத்தமிழ்		,,	,,	0

அச்சிடாத பகுதிகள்.

பேரூர்க் கோவை.
ஷை கலம்பகம்.
ஷை சிலேடை வெண்பா.
ஷை பச்சைநாயகி மாலை.
ஷை சந்தப்பதிகம்.
குருந்தாசலப் பிரபந்தம்.
பழனிமலைப் பிரபந்தம்.
பத்திராசலப் பிள்ளைத்தமிழ்.